KEMENTERIAN PENDIDIKAN MALAYSIA

KURIKULUM STANDARD PRASEKOLAH KEBANGSAAN

# Pendidikan Prasekolah

**(DOKUMEN STANDARD KURIKULUM DAN PENTAKSIRAN SEMAKAN 2017)**

**(EDISI TERJEMAHAN BAHASA TAMIL)**



KEMENTERIAN PENDIDIKAN MALAYSIA

KURIKULUM STANDARD PRASEKOLAH KEBANGSAAN

# Pendidikan Prasekolah

**Dokumen Standard Kurikulum dan Pentaksiran Semakan 2017**

**(EDISI TERJEMAHAN BAHASA TAMIL)**

Bahagian Pembangunan Kurikulum

2017

Terbitan 2017

© Kementerian Pendidikan Malaysia

Hak Cipta Terpelihara. Tidak dibenarkan mengeluar ulang mana-mana bahagian artikel, ilustrasi dan isi kandungan buku ini dalam apa juga bentuk dan dengan cara apa jua sama ada secara elektronik, fotokopi, mekanik, rakaman atau cara lain sebelum mendapat kebenaran bertulis daripada Pengarah, Bahagian Pembangunan Kurikulum, Kementerian Pendidikan Malaysia, Aras 4-8, Blok E9, Parcel E, KompleksPentadbiran Kerajaan Persekutuan, 62604 Putrajaya.

## உள்ளடக்கம்


| | |
|---|---|
| ருக்குன் நெகாரா........................................ | vii |
| தேசியக் கல்வித் தத்துவம்........................................ | ix |
| அணிந்துரை........................................ | xii |
| முன்னுரை........................................ | 1 |
| குறியிலக்கு........................................ | 2 |
| நோக்கம்........................................ | 2 |
| பாலர்பள்ளிக்கான தர அடிப்படையிலான தேசியக் கலைத்திட்ட அமைப்பு........................................ | 3 |
| குவிவு........................................ | 5 |
| 21ஆம் நூற்றாண்டிற்கான திறனும் பண்பும்........................................ | 5 |
| உயர்நிலைச் சிந்தனைத்திறன்........................................ | 7 |
| கற்றல் சூழல்........................................ | 8 |
| கற்றல் கற்பித்தல் நடவடிக்கை திட்டமிடல்........................................ | 9 |
| கற்றல் கற்பித்தல் உத்திகள்........................................ | 10 |
| பெற்றோர் மற்றும் சமூகத்தின் ஈடுபாடு........................................ | 14 |
| சிறப்புத் தேவை மாணவர்கள்........................................ | 14 |
| விரவி வரும் கூறுகள்........................................ | 15 |
| பள்ளி மதிப்பீடு........................................ | 18 |

உள்ளடக்க அமைப்பு........ 20
குறைந்தபட்ச நேர ஒதுக்கீடு........ 21
கற்றல் கற்பித்தல் நேர ஒதுக்கீடு........ 21
தொடர்பு உத்திரம்........ 25
தேசிய மொழி........ 27
ஆங்கில மொழி........ 36
சீனமொழி........ 45
தமிழ்மொழி........ 53
ஆன்மிகம், நடத்தை, பண்பு உத்திரம்........ 61
இஸ்லாமியக் கல்வி........ 63
நன்னெறிக் கல்வி........ 71
சுய சால்புடைமை உத்திரம்........ 79
உடல் வளர்ச்சி, முருகுணர்ச்சி உத்திரம் ........ 87
உடல் வளர்ச்சியும் சுகாதாரம் பேணலும்........ 89
ஆக்கமும் முருகுணர்ச்சியும்........ 99
அறிவியல் தொழில்நுட்ப உத்திரம்........ 107
ஆரம்ப அறிவியல்........ 109
ஆரம்பக் கணிதம்........ 117
மனிதவியல் உத்திரம்........ 127
தரஅடைவு ........ 137

தொடர்பு உத்திரம்........................................................................................................ 139

ஆன்மிகம், நடத்தை, பண்பு உத்திரம்.................................................................................... 145

சுய சால்புடைமை உத்திரம்............................................................................................... 152

உடல் வளர்ச்சி, முருகுணர்ச்சி உத்திரம்.............................................................................. 154

அறிவியல் தொழில்நுட்ப உத்திரம்...................................................................................... 158

மனிதவியல் உத்திரம்...................................................................................................... 165

திட்ட வரைவுக் குழு.............................................................................................................. 167

பங்களித்தவர்கள்.................................................................................................................. 171

# RUKUN NEGARA

BAHAWASANYA Negara kita Malaysia mendukung cita-cita hendak:
Mencapai perpaduan yang lebih erat dalam kalangan seluruh masyarakatnya;
Memelihara satu cara hidup demokratik;
Mencipta satu masyarakat yang adil di mana kemakmuran negara
akan dapat dinikmati bersama secara adil dan saksama;
Menjamin satu cara yang liberal terhadap tradisi-tradisi
kebudayaannya yang kaya dan berbagai corak;
Membina satu masyarakat progresif yang akan menggunakan
sains dan teknologi moden;

MAKA KAMI, rakyat Malaysia, berikrar akan menumpukan seluruh tenaga dan usaha kami untuk mencapai cita-cita tersebut berdasarkan prinsip-prinsip yang berikut:

**KEPERCAYAAN KEPADA TUHAN**
**KESETIAAN KEPADA RAJA DAN NEGARA**
**KELUHURAN PERLEMBAGAAN**
**KEDAULATAN UNDANG-UNDANG**
**KESOPANAN DAN KESUSILAAN**

# ருக்குன் நெகாரா

உறுதியாக, நம் மலேசிய நாடானது பின்வருவனவற்றை அடைய இலட்சியமாகக் கொண்டுள்ளது:
அனைத்துச் சமூகங்களுக்கிடையில் அணுக்கமான ஒற்றுமையை ஏற்படுத்துதல்;
ஒரே ஜனநாயக வாழ்க்கை முறையைப் பேணுதல்;
நாட்டின் சுபிட்சத்தை நியாயமாகவும் நடுநிலையாகவும் பகிர்ந்து கொள்ளும்
சமுதாயத்தை உருவாக்குதல்;
பல்லின மக்களின் பல்வித பாரம்பரியமும் பண்பாடும் சுதந்திரமாகப்
பின்பற்றப்படுவதை உறுதி செய்தல்;
அறிவியலையும் நவீன தொழில்நுட்பத்தையும் பயன்படுத்தும் முற்போக்கான
சமுதாயத்தை உருவாக்குதல்;
ஆகையால், மலேசிய மக்களாகிய நாங்கள், மேற்கூறிய இலட்சியங்களை அடைய பின்வரும் கோட்பாடுகளின் அடிப்படையில் எங்களின் முழுச் சக்தியையும் முயற்சியையும் ஒருங்கிணைத்துச் செயல்படுவோம் என உறுதிப் பிரமாணம் செய்கிறோம்:

**இறைவன் மீது நம்பிக்கை வைத்தல்**
**பேரரசருக்கும் நாட்டிற்கும் விசுவாசம் செலுத்துதல்**
**அரசியலமைப்புச் சட்டத்தை உறுதியாகக் கடைப்பிடித்தல்**
**சட்டமுறைப்படி ஆட்சி நடத்துதல்**
**நன்னடத்தையையும் ஒழுக்கத்தையும் பேணுதல்**

# FALSAFAH PENDIDIKAN KEBANGSAAN

“Pendidikan di Malaysia adalah suatu usaha berterusan ke arah memperkembangkan lagi potensi individu secara menyeluruh dan bersepadu untuk mewujudkan insan yang seimbang dan harmonis dari segi intelek, rohani, emosi dan jasmani berdasarkan kepercayaan dan kepatuhan kepada Tuhan. Usaha ini adalah bertujuan untuk melahirkan warganegara Malaysia yang berilmu pengetahuan, berketerampilan, berakhlak mulia, bertanggungjawab dan berkeupayaan mencapai kesejahteraan diri serta memberi sumbangan terhadap keharmonian dan kemakmuran keluarga, masyarakat dan negara.”

Sumber: Akta Pendidikan 1996 (Akta 550)

# தேசியக் கல்வித் தத்துவம்

மலேசியக் கல்வியானது இறைநம்பிக்கை, இறைவழி நிற்றல் எனும் அடிப்படையில் அறிவாற்றல், ஆன்மிகம், உள்ளம், உடல் ஆகியவை ஒன்றிணைந்து சமன்நிலையும் இயைபும் பெறத் தனிமனிதரின் ஆற்றலை முழுமையாக மேம்படுத்தும் ஒரு தொடர் முயற்சியாகும். இம்முயற்சியானது அறிவு, சால்பு, நன்னெறி, பொறுப்புணர்ச்சி, நல்வாழ்வு பெறும் ஆற்றல் ஆகியவற்றைப் பெற்றுக் குடும்பத்திற்கும் சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் ஒருமைப்பாட்டையும் செழிப்பையும் நல்கும் மலேசியரை உருவாக்கும் நோக்கத்தைக் கொண்டதாகும்.

மூலம்: கல்விச் சட்டம் 1996 (சட்டம் 550)

# DEFINISI KURIKULUM KEBANGSAAN

**3. Kurikulum Kebangsaan**

(1) Kurikulum Kebangsaan ialah suatu program pendidikan yang termasuk kurikulum dan kegiatan kokurikulum yang merangkumi semua pengetahuan, kemahiran, norma, nilai, unsur kebudayaan dan kepercayaan untuk membantu perkembangan seseorang murid dengan sepenuhnya dari segi jasmani, rohani, mental dan emosi serta untuk menanam dan mempertingkatkan nilai moral yang diingini dan untuk menyampaikan pengetahuan.

Sumber: Peraturan-Peraturan Pendidikan (Kurikulum Kebangsaan) 1997
[PU(A)531/97]

**KATA PENGANTAR**

Kurikulum Standard Prasekolah Kebangsaan (KSPK) yang dilaksanakan mulai tahun 2010 telah disemak semula bagi memenuhi tuntutan dasar baharu di bawah Pelan Pembangunan Pendidikan Malaysia (PPPM) 2013-2025 kualiti kurikulum yang dilaksanakan setanding dengan standard antarabangsa. Kurikulum berasaskan standard yang menjadi amalan antarabangsa telah dijelmakan dalam KSPK menerusi penggubalan Dokumen Standard Kurikulum dan Pentaksiran (DSKP) yang mengandungi Standard Kandungan, Standard Pembelajaran dan Standard Prestasi.

Usaha memasukkan Standard Prestasi di dalam dokumen kurikulum telah mengubah landskap sejarah sejak Kurikulum Kebangsaan dilaksanakan di bawah Sistem Pendidikan Kebangsaan. Menerusinya murid dapat ditaksir secara berterusan untuk mengenal pasti tahap penguasaannya dalam sesuatu bidang pembelajaran serta membolehkan guru membuat tindakan susulan bagi mempertingkatkan perkembangan murid.

DSKP yang dihasilkan juga telah menyepadukan enam tunjang Kerangka KSPK, mengintegrasikan pengetahuan, kemahiran dan nilai, serta memasukkan secara eksplisit Kemahiran Abad Ke-21 dan Kemahiran Berfikir Aras Tinggi (KBAT).Penyepaduan tersebut dilakukan untuk melahirkan insan seimbang dan harmonis dari segi intelek, rohani emosi dan, jasmani sebagaimana tuntutan Falsafah Pendidikan Kebangsaan.

Bagi menjayakan pelaksanaan KSPK, pengajaran dan pembelajaran guru perlu memberi penekanan kepada KBAT dengan memberi fokus kepada pendekatan Pembelajaran Berasaskan Inkuiri dan Pembelajaran Berasaskan Projek supaya murid dapat menguasai kemahiran yang diperlukan dalam abad ke-21.

Kementerian Pendidikan Malaysia (KPM) merakamkan setinggi-tinggi penghargaan dan ucapan terima kasih kepada semua pihak yang terlibat dalam penggubalan KSPK Pendidikan Khas (Semakan 2017). Semoga pelaksanaan KSPK Pendidikan Khas mencapai hasrat dan matlamat Sistem Pendidikan Kebangsaan.

**Dr. SARIAH BINTI ABD. JALIL**
Pengarah
Bahagian Pembangunan Kurikulum

# முன்னுரை

பாலர்பள்ளிக் கல்வியானது கல்வி உலகில் அதிமுக்கிய முதல் அனுபவத்தினைத் தருகின்ற ஒன்று. பள்ளியில் பெறும் தரமான, அர்த்தமிக்க, மகிழ்ச்சியூட்டும் விளைபயன்மிக்க அனுபவங்கள் மாணவர்களுக்குத் திறன், தன்னம்பிக்கை, நேர்மறைச் சிந்தனை ஆகியவற்றை அளித்துத் தொடர்ந்து கற்றலை மேற்கொள்ள பெரிதும் உதவும்.

பாலர்பள்ளிக்கான தர அடிப்படையிலான தேசியக் கலைத்திட்டத்தின் தர மற்றும் மதிப்பீட்டு ஆவணம் ஆசிரியர்களுக்கு முக்கியமான வழிகாட்டியாகத் திகழ்கிறது. இக்கலைத்திட்டம் நாட்டின் உன்னத நோக்கத்தைக் குறிக்கோளாகக் கொண்டு அனைத்துலகத் தரத்தில் இன்றைய மற்றும் வருங்கால தலைமுறைக்கு ஏற்றவாறு தயாரிக்கப்பட்டுள்ளது.

பாலர்பள்ளிக்கான தர அடிப்படையிலான தேசியக் கலைத்திட்டம் மாணவர்களின் வளர்ச்சியையும் அவர்களுக்கான கற்றல் கோட்பாடுகளையும் கருத்தில் கொண்டு பொருத்தமான நடைமுறை கொள்கைக்கேற்ற வகையில் வரையறுக்கப்பட்டுள்ளது. இக்கலைத்திட்டம் ஆறு உத்திரங்களை உள்ளடக்கியுள்ளது. அவை தொடர்பு உத்திரம்; ஆன்மிகம், நடத்தை, பண்பு ஆகியவற்றிற்கான உத்திரம்; மனிதவியல் உத்திரம்; உடல் வளர்ச்சி மற்றும் முருகுணர்ச்சிக்கான உத்திரம்; அறிவியல் தொழில்நுட்ப உத்திரம்; சுய சால்புடைமை உத்திரம் ஆகியவையாகும்.

இக்கலைத்திட்டத்தில் உயர்நிலைச் சிந்தனைத் திறனுக்கு முக்கியத்துவம் அளித்து, கற்றல் தரத்தில் தெரிநிலையாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. கற்றல் கற்பித்தலில் உயர்நிலைச் சிந்தனைத் திறன் இருப்பதை ஆசிரியர்கள் உறுதி செய்ய வேண்டும்.

இந்த ஆவணத்தின் குறிப்புகள் ஆசிரியர்கள் தரமான கற்றல் கற்பித்தலைத் திட்டமிடவும் செயல்படுத்தவும் உதவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. திட்டமிட்ட நடவடிக்கைகள் மாணவர்களுக்கு நல்ல வளமான அனுபவத்தையும் மகிழ்ச்சியையும் தருவதுடன் அவர்கள் ஆர்வத்துடனும் பாதுகாப்புடனும் நடவடிக்கையில் ஈடுபடுவதை உறுதி செய்ய வேண்டும். ஆசிரியர்கள் ஆக்கச் சிந்தனையுடன் கற்றல் தரத்திற்கேற்ப மாணவர்களுக்குப் பொருத்தமான பல்வகை நடவடிக்கைகளைத் தேர்ந்தெடுத்து வழங்கிட ஊக்குவிக்கப்படுகின்றனர். கல்வித் திட்டத்தில் வரையறுக்கப்பட்ட இலக்கு மற்றும் நோக்கத்தை அடைய ஆசிரியர்கள் அதனை உய்த்துணர்ந்து செயல்படுத்துவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், பாலர்பள்ளியில் கற்ற அடிப்படை அறிவும் திறனும் தொடக்கப்பள்ளிக்குச் செல்ல மாணவர்களைத் தயார் செய்கின்றது.

## குறியிலக்கு

பாலர்பள்ளிக்கான தர அடிப்படையிலான தேசியக் கலைத்திட்டத்தின் தர மற்றும் மதிப்பீட்டு ஆவணம் நான்கு முதல் ஆறு வயது வரையிலான மாணவர்களின் ஆற்றலை முழுமையாகவும் ஒருங்கிணைந்தும் மேம்படுத்துவதைக் குறியிலக்காகக் கொண்டுள்ளது. இக்குறியிலக்கு மாணவர்களின் அறிவாற்றல், ஆன்மிகம், உள்ளம், உடல் ஆகிய கூறுகளில் சமச்சீர் வளர்ச்சி அடைவதை இலக்காகக் கொண்டுள்ளது. இந்த இலக்கானது, பாதுகாப்பான சுற்றுச்சூழலிலும் வளத்தை ஊட்டுவதாகவும் மகிழ்வூட்டும் ஆக்கமும் அர்த்தமும் உள்ள கற்றல் நடவடிக்கையின் வழி அடையப்பெற வேண்டும். இது மாணவர்களிடையே திறன் மேம்பாடு, தன்னம்பிக்கை மற்றும் சுயகருத்துருவுடன் சவால்களை எதிர்நோக்கவும் தொடர்ந்து கற்றலை மேற்கொள்ளவும் தயார் படுத்துகின்றது.

## நோக்கம்


பாலர்பள்ளிக்கான தர அடிப்படையிலான தேசியக் கலைத்திட்டத்தின் தர மற்றும் மதிப்பீட்டு ஆவணம் பின்வரும் நோக்கங்களை மாணவர்கள் அடைய வழிவகுக்கின்றது:

1. சரியான மொழியைப் பயன்படுத்தித் தொடர்பு கொள்ளுதல்.
2. இஸ்லாமிய மாணவர்கள் இஸ்லாமியக் கூறுகளைத் தமது அன்றாட வாழ்க்கையில் கடைப்பிடித்தல்.
3. மலேசிய சமூகத்தினரின் நன்னெறிக் கூறுகளைக் கடைப்பிடித்தல்.
4. மலேசிய சமூகத்தினரின் பண்பாட்டை நன்கு அறிந்து மதித்தல்.
5. சுற்றுச்சூழலை நேசித்தல்; நலம் பாராட்டுதல்.
6. தன்னாற்றலையும் நேர்மறை தன்னம்பிக்கையையும் வளர்த்தல்.
7. சுகாதார நடைமுறைகளை அமல்படுத்துதல்; உடல் சுறுசுறுப்பை மேம்படுத்துதல்; சுய பாதுகாப்பைப் பாதுகாத்தல்.
8. ஆக்கச்சிந்தனையையும் முருகுணர்ச்சியையும் வளர்த்தல்.
9. ஆய்வுச் சிந்தனை, ஆக்கச் சிந்தனை, புத்தாக்கச் சிந்தனை, சிக்கலுக்குத் தீர்வு காணும் திறன் ஆகியவற்றை அன்றாட வாழ்க்கையிலும் கற்றலிலும் பயன்படுத்துதல்.

## பாலர்பள்ளிக்கான தர அடிப்படையிலான தேசியக் கலைத்திட்ட அமைப்பு

சீரமைக்கப்பட்ட பாலர்பள்ளிக்கான தர அடிப்படையிலான தேசியக் கலைத்திட்டம் கீழ்க்கண்ட ஆறு உத்திரங்களை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. அவை தொடர்பு; ஆன்மிகம், நடத்தை, பண்பு; மனிதவியல்; சுய சால்புடைமை; உடல் வளர்ச்சியும் முருகுணர்ச்சியும்; அறிவியலும் தொழில்நுட்பமும் என்பதாகும்.

ஒவ்வோர் உத்திரமும் ஒன்றோடொன்று தொடர்பு கொண்டுள்ளன. அவற்றோடு ஆய்வுச் சிந்தனை, ஆக்கச் சிந்தனை, புத்தாக்கச் சிந்தனை ஆகியவையும் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. இந்த ஒருங்கிணைப்பு ஆன்மிகம், அறிவாற்றல், சுய சால்புடைமை, ஆய்வுச் சிந்தனை, ஆக்கச் சிந்தனை, புத்தாக்கச் சிந்தனை ஆகியவற்றைக் கொண்ட மனித மூலதனத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது (விளக்கப்படம் 1).




**விளக்கப்படம் 1:** பாலர்பள்ளிக்கான தர அடிப்படையிலான தேசியக் கலைத்திட்ட அமைப்பு

**தொடர்பு உத்திரம்**

தொடர்பு உத்திரம் பிறருடன் வாய்மொழியாகவும் மற்ற வகையிலும் தொடர்பு கொள்ளும் ஆற்றலை வலியுறுத்துகின்றது. இவ்வுத்திரத்தில் அவசியம் கற்றுக்கொள்ள வேண்டிய இரு மொழிக் கூறுகள் தேசிய மொழியும் ஆங்கில மொழியுமாகும். சீன அல்லது தமிழ்ப்பள்ளி மாணவர்கள் அவசியம் சீனம் அல்லது தமிழ் மொழியைப் பயிலல் வேண்டும் என வலியுறுத்தப்படுகிறது.

**ஆன்மிகம், நடத்தை, பண்பு ஆகியவற்றிற்கான உத்திரம்**

ஆன்மிகம், நடத்தை, பண்பு ஆகியவற்றிற்கான உத்திரம் சமய நடைமுறைகள், நம்பிக்கை, நடத்தை, பண்பு ஆகியவற்றை உய்த்துணர்வதற்கு முக்கியத்துவம் வழங்குகின்றது. இஸ்லாமிய மாணவர்களுக்கு இஸ்லாமியக் கல்வியும் இஸ்லாம் அல்லாதவர்களுக்கு நன்னெறிக் கல்வியும் ஆன்மிகம், நடத்தை, பண்பு ஆகியவற்றிற்கான உத்திரத்தின் அறிவுத்துறைகளாக வரையறுக்கப்பட்டுள்ளன.

**மனிதவியல் உத்திரம்**

சமூகவியல், வாழ்விடச் சுற்றுச்சூழல், நாடு, உலகம் ஆகியவற்றோடு நாட்டுப்பற்றையும் ஒற்றுமையையும் உய்த்துணர்கின்ற அறிவையும் நடைமுறையையும் கைவரப் பெறுவதற்கு மனிதவியல் உத்திரம் வலியுறுத்துகின்றது.

**சுய சால்புடைமை உத்திரம்**

சமூக உணர்வியலை வலியுறுத்துவதோடு பிறருடன் தொடர்பு கொள்ளும் திறனையும் மாணவர்களிடையே வளர்த்தலைச் சுய சால்புடைமை உத்திரம் வலியுறுத்துகின்றது. மேலும், கலைத்திட்டம், புறப்பாட நடவடிக்கை ஆகியவற்றின்வழி தலைமைத்துவத்தையும் ஆளுமையையும் புகட்டுதலை இவ்வுத்திரம் வலியுறுத்துகின்றது.

**உடல் வளர்ச்சி, முருகுணர்ச்சிக்கான உத்திரம்**

உடல் வளர்ச்சி, முருகுணர்ச்சிக்கான உத்திரம் தனிமனித நல்வாழ்விற்காக உடற்கூறு, சுகாதாரம் ஆகியவற்றை மேம்படுத்துவதையும் கற்பனை வளம், ஆக்கம், திறம், பிறரைப் போற்றுதல் ஆகிய கூறுகளை வலுப்படுத்துவதையும் முக்கியமாகக் கொண்டுள்ளது. உடல் வளர்ச்சியை மேம்படுத்துவதற்கான துறைகளாக உடற்கல்வியும் நலக்கல்வியும் விளங்குகின்றன. இந்த உத்திரம் உடல் வளர்ச்சி, சுகாதாரப் பேணல், படைப்பாற்றல், முருகுணர்ச்சி ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.

**அறிவியல், தொழில்நுட்பத்திற்கான உத்திரம்**

அறிவியல், தொழில்நுட்பத்திற்கான உத்திரம் அறிவியல் அறிவு, அறிவியல் திறன், அறிவியல் பண்பு, கணித அறிவு, கணிதத் திறன் ஆகியவற்றை வலியுறுத்துகின்றது. ஆரம்ப அறிவியலையும் ஆரம்பக் கணிதத்தையும் இவ்வுத்திரம் உள்ளடக்கியுள்ளது.

## குவிவு

பாலர்பள்ளி கலைத்திட்டம் மாணவர்களிடையே தொடர்புத் திறனையும் பிறரிடைத் தொடர்பினையும் வளர்க்கும் நோக்கத்தைக் கொண்டுள்ளது. மேலும், சவால்களை எதிர்கொள்ளும் ஆற்றலும் பிரச்சனைகளைக் களையும் திறமையும் கற்கும் ஆர்வமும் தொடர்ந்து கற்பதற்கான மனப்பான்மையும் கொண்ட மாணவர்களை உருவாக்குவது இக்கலைத்திட்டதின் எதிர்பார்ப்பாகும்.

## 21ஆம் நூற்றாண்டிற்கான திறனும் பண்பும்

பாலர்பள்ளிக்கான தர அடிப்படையிலான தேசியக் கலைத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களுள் ஒன்று 21ஆம் நூற்றாண்டின் திறன்களைக் கொண்ட மாணவர்களை உருவாக்குவதாகும். குறிப்பாகச் சிந்திப்பதிலும் வாழ்வியல் திறனிலும் தொழில் தர்மத்திலும் மேம்பாடடைந்த மாணவர்கள் உருவாக்கத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இது வெற்றி பெற ஒவ்வொரு மாணவரும் கைவரப்பெற வேண்டிய திறனும் பண்பும் அட்டவணை 1இல் விவரிக்கப்பட்டுள்ள மாணவரின் சுயவிவரத்தில் கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 1: மாணவரின் சுயவிவரம்

| மாணவர் சுயவிவரம் | விளக்கம் |
|---|---|
| **தாங்கும் வலிமை** | இடர்களையும் சவால்களையும் அறிவுடனும் நம்பிக்கையுடனும் சகிப்புத்தன்மையுடனும் பரிவுடனும் எதிர்கொண்டு வெல்லும் திறன் கொண்டிருப்பர். |
| **தொடர்புகொள்ளும் திறன்** | பல்வகை ஊடகங்களையும் தொழில்நுட்பத்தையும் பயன்படுத்திச் சிந்தனை, ஏடல், தகவல் ஆகியவற்றைத் தன்னம்பிக்கையுடனும் ஆக்ககரமாகவும் பேச்சு, எழுத்து மூலம் வெளிப்படுத்துவர். |

| மாணவர் சுயவிவரம் | விளக்கம் |
|---|---|
| **சிந்தனையாளர்** | ஆய்வு, ஆக்கப் புத்தாக்கச் சிந்தனை உடையவர்; சிக்கல்களைக் களைந்து நியாயமான முடிவெடுப்பவர்; மாணவர் நிலையில் நின்று கற்றலைச் சிந்திப்பவர்; தனிமனிதர் மற்றும் சமுதாயத்தின் நோக்குநிலை, பண்பாடு, பழக்கவழக்கம் ஆகியவற்றைத் திறந்த மனத்தோடு பார்ப்பவர்; தன்னம்பிக்கையோடும் ஆக்கத்தோடும் புதியதைக் கற்றுக் கொள்பவர். |
| **குழுவாகச் செயல்படுதல்** | விளைபயன்மிக்க வகையிலும் சுமூகமாகவும் பிறருடன் ஒத்துழைப்பர்; குழு உறுப்பினர் ஒவ்வொருவரின் பங்களிப்பை மதிப்பதோடு குழுவோடு சேர்ந்து பொறுப்பை ஏற்றுக் கொள்பவர்; ஒருங்கிணைந்து செயல்படுவதன்வழி பிறரிடைத்தொடர்புத் திறனைப் பெறுதல். இதன்வழி சிறந்த தலைவராகவும் குழு உறுப்பினராகவும் இருக்கும் தகுதியைப் பெற்றிருப்பர். |

| மாணவர் சுயவிவரம் | விளக்கம் |
|---|---|
| **அறியும் ஆர்வம்** | புதிய அணுகுமுறையையும் ஏடல்களையும் தெரிந்து கொள்வதற்கு ஆர்வத்தை ஏற்படுத்திக் கொள்பவர். ஆய்வு மேற்கொள்ளத் தேவையான திறன்களைக் கற்பதோடு சுயமாகவும் கற்கக் கூடியவர். வாழ்நாள் கற்றல் அனுபவங்களைத் தொடர்ச்சியாக நுகர்ந்து மகிழ்வர். |
| **கொள்கையுள்ளவர்** | தனிநபர் மற்றும் சமூகத்தின் தன்மானத்தை மதிப்பதோடு நாணயம், நேர்மை, சமத்துவம், நீதி ஆகிய பண்புகளையும் கொண்டிருப்பர். தங்களின் முடிவுகளுக்கும் மேற்கொள்ளும் நடவடிக்கைகளின் விளைவுகளுக்கும் பொறுப்பேற்பர். |
| **தகவல் நிறைந்தவர்** | பல்வேறு துறைசார்ந்த அறிவினைப் பெற்று அதனை ஆழமாகவும் விரிவாகவும் புரிந்து கொள்வர். உள்நாட்டு, அனைத்துலக விவகாரங்களைத் திறமையாகவும் விளைபயனுள்ள வகையிலும் ஆராய்வர். கிடைக்கப்பெற்ற தகவல்கள் தொடர்பான |

| மாணவர் சுயவிவரம் | விளக்கம் |
|---|---|
| | நன்னெறி/சட்டச் சிக்கல்களைப் புரிந்திருப்பர். |
| **அன்பானவர்/ பரிவுள்ளவர்** | பிறர் தேவையையும் உணர்வையும் புரிந்து கொண்டு மதிப்பும் பரிவும் இரக்கமும் காட்டுவர். சமுதாயச் சேவையில் தங்களை முனைப்புடன் ஈடுபடுத்திக் கொள்வர். சுற்றுச்சூழல் நிலைத்தன்மையை உறுதி செய்வர். |
| **நாட்டுப்பற்று** | நாட்டின் மீது அன்பையும் மரியாதையையும் ஆதரவையும் காட்டுவர். |

## உயர்நிலைச் சிந்தனைத்திறன்

கற்றல் கற்பித்தலில் ஆசிரியர்கள் உயர்நிலைச் சிந்தனைத்திறனைச் சரியாகப் பொருள்பெயர்ப்புச் செய்து மாணவர்களின் சிந்தனையை முறைப்படுத்தும் வகையில் கலைத்திட்டத்தில் அது தெரிநிலையில் எழுதப்பட்டுள்ளது. அட்டவணை 2இல் உயர்நிலைச் சிந்தனைத்திறனின் நான்கு சிந்தனைப் படிநிலைகள் விளக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 2: உயர்நிலைச் சிந்தனைத்திறனுக்கான சிந்தனைப் படிநிலைகள்.

| சிந்தனைப் படிநிலைகள் | விளக்கம் |
|---|---|
| பயன்படுத்துதல் | அறிவு, திறன், பண்பு ஆகியவற்றைப் பல்வேறு சூழல்களில் பயன்படுத்தி ஒன்றைச் செய்தல். |
| பகுத்தாய்தல் | தகவலைச் சிறு சிறு பகுதிகளாகப் பிரித்து அவற்றை ஆழமாகப் புரிந்து கொள்வதோடு அவற்றுக்கிடையிலான தொடர்பையும் அறிதல். |
| மதிப்பிடுதல் | அறிவு, அனுபவம், திறன், பண்பு ஆகியவற்றைக் கொண்டு பரிசீலனை செய்தல்; முடிவெடுத்தல்; நியாயப்படுத்துதல். |
| உருவாக்குதல் | ஆக்கப் புத்தாக்கத் தன்மையைக் கொண்ட பொருள், ஏடல், வழிமுறை ஆகியவற்றை உருவாக்குதல். |

அறிவு, திறன், பண்பு ஆகியவற்றைப் பயன்படுத்திச் சீர்தூக்கிப் பார்த்து, மீட்டுணர்ந்து சிக்கல் களையவும் முடிவெடுக்கவும் புத்தாக்கச் சிந்தனையுடன் ஒன்றை உருவாக்கவும் பயன்படுகின்ற சிந்தனை ஆற்றலே உயர்நிலைச் சிந்தனைத்திறனாகக் கருதப்படுகின்றது.

உயர்நிலைச் சிந்தனைத்திறன் ஆய்வுச் சிந்தனை, ஆக்கச் சிந்தனை, சீர்தூக்கிப் பார்த்தல், சிந்தனை வியூகம் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.

**ஆய்வுச் சிந்தனை** என்பது தக்கக் காரணங்களையும் சான்றுகளையும் கொண்டு அறிவார்ந்த நிலையில் ஏரணமாகச் சீர்தூக்கிப் பார்த்து மதிப்பீடு செய்யும் ஆற்றலாகும்.

**ஆக்கச் சிந்தனை** என்பது கற்பனை ஆற்றலைக் கொண்டு பாரம்பரிய முறையில் இல்லாமல் மாறுபட்ட கோணத்தில் மதிப்புயர்வுமிக்க புதிய ஒன்றனை உருவாக்கும் ஆற்றலாகும்.

**சீர்தூக்கிப் பார்த்தல்** என்பது ஏரணமான முறையில் பரிசீலனை செய்யவும் மதிப்பிடவும் கூடிய ஆற்றலாகும்.

**சிந்தனை வியூகம்** என்பது சிக்கலுக்குத் தீர்வுகாணும் வகையில் கட்டமைப்பினைக் கொண்ட தீர்க்கமான சிந்தனையாகும்.

சீர்தூக்கிப் பார்த்தல், ஆய்ந்தறிதல்வழி கற்றல், சிக்கலுக்குத் தீர்வுகாணுதல், செயல்திட்டம் ஆகிய நடவடிக்கைகள்வழி உயர்நிலைச் சிந்தனைத்திறனை வகுப்பறையில் கற்பிக்கலாம். சிந்தனைவரைவு, மனவோட்டவரைவு போன்ற சிந்தனைக்கருவிகளைப் பயன்படுத்தியும் உயர்நிலைச் சிந்தனைக் கேள்விகள் வாயிலாகவும் ஆசிரியர்கள் மாணவர்களின் சிந்தனைத்திறனை வளர்க்கலாம்.

## கற்றல் சூழல்

கற்றல் சூழல் என்பது மாணவர்கள் கற்பதற்கும் ஆசிரியர்கள் போதிப்பதற்கும் உரிய இடமாகும். இக்கற்றல் சூழல் பாலர்பள்ளிக் கல்வியில் முக்கியக் கூறாக அமைகிறது. அதோடு ஆசிரியர் வகுப்பறைக்கு உகந்த கற்றல் சூழலையும் இருவழி தகவல் பரிமாற்றத்தையும் முறையாகத் திட்டமிட வேண்டும். சிறந்த கற்றல் சூழல் பயனுள்ள கல்வி, உத்தரவாதமிக்க வகுப்புக் கட்டுப்பாடு மற்றும் ஆசிரியர் மாணவர்களுக்கிடையே சுமூகமான உறவை மேம்படுத்துவதோடு மகிழ்ச்சியான சூழலையும் மாணவர்களுக்கு அளிக்கிறது.

## சுகாதாரமும் பாதுகாப்பும்

- பயன்படுத்தக் கூடிய இடம், தளவாடப் பொருள்கள் ஆகியவை சுத்தமாகவும் பாதுகாப்பாகவும் இருத்தல்.
- போதுமான வெளிச்சம் மற்றும் காற்றோட்டம் இருத்தல்.
- கற்பதற்குத் தூண்டுதலாகவும் பாதுகாப்பானதாகவும் உள்ள சுற்றுச்சூழலாக இருத்தல்.

## வகுப்பறை அமைப்பு

- கற்றல் கற்பித்தலுக்கேற்ப வகுப்பறை அமைப்பை அவ்வப்போது மாற்றி அமைத்தல்.
- மாணவர்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ள போதுமான இடமிருக்கும் வகையில் வகுப்பறைத் தளவாடங்களையும் உபகரணங்களையும் முறையாக அடுக்கி வைத்தல்.

- மாணவர்கள் எளிதில் அணுக தளவாடப் பொருள்களை நேர்த்தியாக அடுக்கி வைத்தல். கற்றல் நோக்கத்தை அடையவும் மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்டவும் பொருள்களை மாற்றி அமைத்தல் வேண்டும்.
- மாணவர்களின் படைப்புகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து அவற்றைக் காட்சிக்கு வைக்க வேண்டும். இது மாணவர்களின் தன்னம்பிக்கையை மேம்படுத்துவதுடன் அவர்கள் நிறைய படைப்புகளை உருவாக்க வழிவகுக்கிறது.

## கற்றல் தளம்

- பாலர்பள்ளியின் வளாகம் முழுவதும் கற்றல் தளமாகும். இது கற்றல் மையத்தையும் உள்ளடக்கிருக்கும்.
- சீர்மிகு கற்றல் தளத்தை அமைத்து அதனை முழுமையாகப் பயன்படுத்துதல்.
- கற்றல் கற்பித்தல் தேவைக்கேற்பக் கற்றல் மையத்தில் உள்ள பொருள்கள் எளிதில் அணுகக்கூடியதாக இருத்தல் அவசியம். மேலும், மாணவர்களுக்கு உகந்த போதுமான வசதிகள் தொடர்ந்து மேம்படுத்தப்பட வேண்டும்.
- ஒருங்கிணைந்தும் தனித்தும் விளையாட ஏதுவான கற்றல் மையத்தை உருவாக்குதல்.
- கற்றல் மையத்தை வடிவமைக்க மாணவர்களை ஈடுபடுத்துதல்.

## கற்றல் கற்பித்தல் நடவடிக்கை திட்டமிடல்

1. கலைத்திட்டத்திற்கேற்பக் கற்றல் கற்பித்தலின் நீண்டகால, குறுகியகால நடவடிக்கைகளைத் திட்டமிடல் வேண்டும்.
2. கால அட்டவணையை மாணவர்களின் வளர்ச்சிக்கு ஏற்பவும் சூழலுக்கு ஏற்பவும் அமைத்துக் கொள்ளலாம்.
3. கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகள் திட்டமிடும் பொழுது கருத்தில் கொள்ள வேண்டிய கூறுகள்:

   - மாணவர்களின் திறன் மற்றும் அறிவாற்றல் வளர்ச்சி நிலை.
   - மாணவர்கள் நடவடிக்கையைத் தேர்வு செய்ய வாய்ப்பளித்தல்.
   - ஆய்ந்தறிதல் நடவடிக்கையில் ஈடுபட மாணவர்களுக்குப் போதுமான வாய்ப்பையும் நேரத்தையும் வழங்க வேண்டும்.
   - கற்றல் கற்பித்தலின் போது நேரடிப் பொருள்களைப் பயன்படுத்துவதன் மூலம் மாணவர்கள் கருத்துருவைக் கைவரப் பெறுவதோடு அறிவையும் மற்றும் கல்வி அறிவை வளர்த்துக் கொள்வர்.
   - மாணவர்களின் கற்றல் விளைபயன் மிக்கதாகவும் அர்த்தமுள்ளதாகவும் அமைய கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகள் பலதரப்பட்டதாகவும் சீரானதாவும் அமைதல் வேண்டும். அவை, வகுப்பறைக்குள்ளும்

வெளியிலும் நடைபெறும் நடவடிக்கை, முனைப்பு மற்றும் முனைப்பற்ற நடவடிக்கை, தனி நபர் நடவடிக்கை, குழு மற்றும் வகுப்பறை நடவடிக்கை, ஆசிரியரின் திட்டமிடப்பட்ட நடவடிக்கை, மாணவர்களின் முயற்சியிலான நடவடிக்கை ஆகும்.

**கற்றல் கற்பித்தல் உத்திகள்**

பலதரப்பட்ட மாணவர்கள் உள்ள வகுப்பறையில் கற்றல் கற்பித்தலுக்குக் குறிப்பிட்ட ஓர் உத்தி அல்லது அணுகுமுறை என்பது கிடையாது. ஆசிரியர்கள் மாணவர்களின் வளர்ச்சி நிலை, தேவைகள், திறன், திறமை மற்றும் ஆர்வத்திற்கேற்றவாறு பல்வகை உத்திகளைத் திட்டமிட்டுச் சிறந்த முறையில் கையாள வேண்டும்.

ஆசிரியர்கள் பயன்படுத்தக்கூடிய பல்வேறு கற்றல் கற்பித்தல் உத்திகள்:-

**மாணவர் மையக் கற்றல்**

மாணவர் மையக் கற்றல் என்பது மாணவர்கள் கற்றல் நடவடிக்கைகளில் பொறுப்புடனும் ஆர்வத்துடனும் பங்கெடுத்துத் தங்களின் ஈடுபாட்டைக் காட்டுதலாகும். மாணவர்கள் தங்கள் ஆர்வம், ஊக்கம், மற்றும் தேவைக்கேற்பப் பங்கினையாற்றிக் கற்றல் நடவடிக்கைகளைச் சுயமாக மேற்கொள்வர். மாணவர்கள் சுதந்திரமாகத் தங்களுக்கு வேண்டிய நடவடிக்கை, பொருள் மற்றும் கற்றல் நேரத்தைத் தேர்ந்தெடுக்க முடியும். இக்கற்றல்கற்பித்தலின் போது மாணவர்களுக்கு ஆசிரியர்கள் வழிகாட்டியாகத் திகழ்வர்.

**விளையாட்டுவழி கற்றல்**

விளையாட்டுவழி கற்றல் என்பது திட்டமிட்டுக் கட்டமைக்கப்பட்ட அணுகுமுறையாகும். இம்முறை மாணவர்களுக்குச் சுதந்திரமான சூழலில் பாதுகாப்பான, மகிழ்ச்சியான மற்றும் அர்த்தமுள்ள கற்றலைப் பெற வாய்ப்பு வழங்குகிறது. இவ்வணுகுமுறை பாலர்பள்ளி கல்விக்கு முக்கியமென வழியுறுத்துவதற்குக் காரணம் விளையாட்டின் வழி பயில்வது மாணவர்களின் இயல்பான செயல்பாட்டிற்கும் நடத்தைக்கும் பொருத்தமாக அமைகிறது. இவ்விளையாட்டு முறையின் வழி மாணவர்கள் ஆராய்ச்சி, கண்டறிதல், அனுபவ வளர்ச்சி போன்றவற்றை நேரடியாகவும் இயற்கையாகவும் பெறுகின்றனர். இவ்வணுகுமுறை மாணவர்களுக்கு உடல் வளர்ச்சி, சமூக உணர்வுகள், அறிவாற்றல், மொழி போன்ற அம்சங்களை முழுமையாக மேம்படுத்த உதவுகிறது.

**ஆய்ந்தறிதல்வழி கற்றல்**

கற்றல் கற்பித்தலில் ஆய்ந்தறிதல்வழி கற்றல் என்பது மாணவர்கள் தங்கள் முன்னறிவைக் கொண்டு ஆய்வு மற்றும் கண்டறிதல் மூலம் தாங்களாகவே சுயமாக அறிவையும் புரிதலையும் மேம்படுத்திக் கொள்ளும் செயற்பாங்கைக் குறிக்கும். செயல்திட்ட அடிப்படையிலான கற்றல், அறிவியல் ஆய்வு கற்றல், சிக்கல் அடிப்படையான கற்றல் மற்றும் கூடிக் கற்றல் போன்றவை இதற்கு உகந்த அணுகுமுறைகளாகக் கருதப்படுகின்றன. இதன் வழி உயர்நிலைச் சிந்தனையை மாணவர்களிடையே வளர்க்க முடியும். மாணவர்களுக்கு ஆய்ந்தறிதல்வழி கற்றல், ஆய்வுவழி கற்றல், கேள்விவழி கற்றல், பிரதிபலிப்புச் சிந்தனைவழி கற்றல், புதிய கல்வி அறிவைப் பெறுதல் ஆகியவற்றைக் கொண்டு செயலாக்கத்தின் மூலம் கற்றலை கற்க முடியும்.

பொதுவாக, ஆய்ந்தறிதல்வழி கற்றலில் ‘எது’ என்பதைத் தவிர்த்து ‘எதற்கு’ மற்றும் ‘எவ்வாறு’ என்ற கூற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. ஆய்ந்தறிதல்வழி கற்றல் மாணவர்கள் ஆக்கம், புத்தாக்கம் மற்றும் ஆய்வுச் சிந்தனைத் திறன்களைப் பெற வழிவகுப்பதோடு நாடிக் கற்றல் திறனையும் ஊக்குவிக்கிறது. மேலும், மாணவர்கள் தங்கள் கற்றல் நேரத்தில் தொடர்ச்சியாகச் சிந்தனை மீட்சியும் பெறுவர்.

**ஒருங்கிணைந்த அணுகுமுறை**

ஒருங்கிணைந்த அணுகுமுறையில் மாணவர்கள் ஒரே சமயத்தில் தாங்கள் கற்க வேண்டிய திறன்களில் இரண்டிற்கும் குறையாத திறன்களை ஒருசேர அடைந்திருக்க வேண்டும். இவ்வணுகுமுறை மாணவர்கள் வாழ்வின் உண்மை நிலையைப் புரிந்து கொள்ள உதவும். வாழ்வின் உண்மை நிலையில் ஒன்றையொன்று சார்ந்துள்ளதால் நாம் அவற்றைப் பிரித்துப் பார்க்க இயலாது. மேலும் ஆசிரியர்கள் கற்றல் கற்பித்தலில் மாணவர்களின் அன்றாட அனுபவத்தை இணைத்துப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இக்கற்றல் பல்வேறு துறைசார்ந்த அறிவு துறைகளைக் கற்றலில் இருந்து பிரிக்காமல் ஒருங்கிணைத்தும் முழுமையாகவும் நடத்தப்படுகிறது. அதோடுமட்டுமல்லாமல் இவ்வணுகுமுறை பல்வேறு திறன், திறன் மற்றும் பண்புக்கூறுகளின் ஒருங்கிணைப்பு, உத்திரங்களுக்கிடையான ஒருங்கிணைப்பு, நடவடிக்கைகளுக்கிடையிலான ஒருங்கிணைப்பு மற்றும் பல்வேறு அணுகுமுறை, உத்தி ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.

ஒருங்கிணைந்த கற்றல் அணுகுமுறை பலதரப்பட்ட மாணவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதோடு அவர்களின் வளர்ச்சி, ஆர்வம், திறமை மற்றும் பல்வகை பின்னணிக்கேற்ப நிறைவு செய்கிறது.

**கருப்பொருள் அணுகுமுறை**

கருப்பொருள் அணுகுமுறையானது காலம், இடம், ஆர்வம், பின்னணி, மாணவர்களின் வளர்ச்சி நிலை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு ஒரு கருப்பொருள் அல்லது தலைப்பைத் தேர்ந்தெடுத்துக் கலைத்திட்ட நிர்வகிப்பும் கற்றலும் செய்வதாகும்.

கருப்பொருள் அணுகுமுறையானது இக்கூறுகளை உள்ளடக்கியுள்ளது:

- ஒரே பொது கருப்பொருள் எல்லாக் கற்றல் பகுதிகளிலும் விரவிவரும் கூறாகக் பயன்படுத்தப்படுகிறது.
- கருப்பொருள் மாணவர்களின் நிலை, சூழல் மற்றும் தற்போதைய நிகழ்வை அடிப்படையாகக் கொண்டு தேர்ந்தெடுக்கப்படுகிறது.
- கட்டமைக்கப்பட்ட மற்றும் முறையான முந்தைய அனுபவத்தையும் புதிய அனுபவத்தையும் தொடர்புப்படுத்துகிறது.
- அறிவையும் திறனையும் விரிவு படுத்துவதுடன், திடப்படுத்தவும் செய்கிறது.
- எளிமையிலிருந்து கடினமான நிலைக்கும், பொதுவிலிருந்து குறிப்பிட்ட நிலைக்கும் மேம்படச் செய்கிறது.

**செயல்திட்ட அடிப்படையிலான கற்றல்**

செயல்திட்ட அடிப்படையிலான கற்றல் என்பது குறிப்பிட்ட காலக் கட்டத்திற்குள் கற்பித்தலைத் திட்டமிட்டு நடத்தப்படும் செயற்பாங்காகும். இவ்வணுகுமுறையானது, மாணவர்கள் ஆய்வின்வழி செயல்திட்ட அறிவைப் பெற வலியுறுத்துகிறது. மேலும், இக்கற்றல் செயற்பாங்கான தரவுகளைச் சேகரித்து ஆய்வு செய்து சரியான அறிக்கை தயார் செய்தலைக் குறிக்கிறது.

செயல்திட்ட அடிப்படையிலான கற்றல் அம்சங்கள்:

- இவ்வணுகுமுறையைத் தனியாள் மற்றும் குழுமுறையில் நடத்தலாம்.
- தொடக்கம் முதல் முடிவு வரை அனைத்துச் செயற்பாங்கு நிலையிலும் மதிப்பீடு நடத்தப்படுகிறது.
- அனைத்துச் செயற்பாங்கு நிலையிலும் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு வழிகாட்டியாகவும் ஆலோசகராகவும் திகழ்வர்.
- பொருள், தகவல், தரவு ஆகியவற்றைச் சேகரித்தல், சேகரித்தவற்றைப் பரிசீலித்தல், அறிக்கை தயாரித்தல், சிந்தனை மீட்சி செய்தல் ஆகியவையே இதில் இடம்பெறும் செயற்பாங்குகளாகும்.
- இவ்வணுகுமுறை மாணவர்களின் திறன், அறிவு, அனுபவம் மற்றும் திறமைக்கேற்ப அடைதல் வேண்டும்.
- நிஜ உலகின் அடிப்படையில் இயங்குதல்.

**திறம்படக் கற்றல்**

திறம்படக் கற்றல் என்றால் மாணவர்கள் ஒரு பாடத்திலிருந்து மற்றொரு பாடத்திற்குச் செல்வதற்குமுன், அப்பாடத்தின் நோக்கத்தைக் கைவரப் பெறுவதை உறுதி செய்தலாகும்.

இத்திறம்படக் கற்றல் மூலம் மாணவர்களுக்குத் தங்கள் திறமைக்கேற்பக் கற்றல் திறனை மேம்படுத்திக் கொள்ள வாய்ப்பு வழங்கப்படுகிறது. இவ்வணுகுமுறையின்படி வாய்ப்பு வழங்கப்பட்டால் ஒவ்வொரு மாணவராலும் சிறப்பாகப் பயில முடியும். இவ்வணுகுமுறைக்குப் போதுமான கால அவகாசமும் தரமான கற்றல் கற்பித்தல் நடவடிக்கையும் தேவை.

**சூழலமைவுக் கற்றல்**

சூழலமைவுக் கற்றல் என்பது பாட பொருளோடு அன்றாட, தனிநபர், சமுதாய மற்றும் வேலையிட சுழல் அனுபவங்களை ஒருங்கிணைத்துக் கற்பிக்கும் அணுகுமுறையாகும். இக்கற்றல் அணுகுமுறை செய்முறை *(hands-on)* மற்றும் சிந்தனை *(minds-on)* நடவடிக்கைகளை உட்படுத்திச் செம்மையான கற்றல் நடவடிக்கையை உருவாக்குகின்றது.

மாணவர்கள் தகவல்களையும் புதிய விஷயங்களையும் தங்கள் சிந்தனையில் பொருளார்ந்த வகையில் புரிந்துகொள்ளும் போது தான் கற்றல் நிகழ்கிறது. மாணவர்களுக்குக் கொடுக்கப்படும் தகவல்கள் அவர்களுக்கு அர்த்தம் உள்ளதாகவும் பல்வகைச் சூழல்களை உள்ளடக்கியும் இருந்தால் விளைபயன்மிக்க கற்றல் நடைபெறும்.

சிறப்பான கற்றலுக்கு ஆசிரியர் பல்வகை கற்றல் சூழலைத் தேர்வு செய்தல் அவசியமாகும். ஆசிரியர் சமுதாயம், கலாச்சாரம், உடல் மற்றும் உளரீதியில் மாணவர் பெற்ற அனுபவத்தை முன்நிறுத்தி கற்றல் சூழலை உருவாக்க முன்வர வேண்டும்.

**பல்வகை நுண்ணறிவுவழி கற்றல்**

பல்வகை நுண்ணறிவுவழி கற்றல், கல்வித் துறைக்கு மிக முக்கியமானது. மாணவர்கள் மத்தியில் பல்வகை நுண்ணறிவு, சிந்திக்கும் முறை, செயல்பாடு, கற்றல் ஆகியவை வேறுபடுகின்றன.

எட்டு விதமான பல்வகை நுண்ணறிவு:-

- மொழித்திறம்: சரியான சொற்களைப் பயன்படுத்திப் பேசும் மற்றும் எழுதும் திறன்
- ஏரணம்: எண்களைச் சரியாகவும் முறையாகவும் பயன்படுத்துதல், சீர்தூக்கிப் பார்த்துக் கருத்தை முன் வைக்கும் ஆற்றல்.
- இடம்: வடிவம், இடம், நிறம், கோடு போன்றவற்றைச் சரியாகக் கண்டறியும் ஆற்றல்.

- இயக்கம்: உடல் அசைவின் மூலம் கருத்துகளையும் உணர்வுகளையும் தீர்வுகளையும் வெளிப்படுத்தும் ஆற்றல்.
- இசை: இசையையும் பாடலையும் கண்டறியும் ஆற்றல்.
- பிறரிடைத் தொடர்பு: மற்றவர்களின் உணர்வு, தன்முனைப்பு, நடத்தை மற்றும் விருப்பத்தைப் புரிந்து கொள்ளும் ஆற்றல்.
- தன்னறி: தன் வலிமை, பலவீனம், விருப்பம் மற்றும் தேவையைப் புரிந்து கொள்ளும் ஆற்றல்.
- இயற்கை நுண்ணறிவு: தாவரங்கள், கனிமங்கள், கற்கள், விலங்குகள் போன்றவற்றை அறிந்து வகைப்படுத்தும் ஆற்றல்.

ஒவ்வொரு மாணவருக்கும் வெவ்வேறான அறிவாற்றலும் திறமையும் உள்ளது. அவர்களுக்குச் சரியான உந்துதல் வளப்படுத்துதல் பொருத்தமான கற்பித்தல் ஆகியவை இருந்தால் அவர்களின் நுண்ணறிவையும் ஆர்வத்தையும் உன்னத நிலைக்கு மேம்படுத்த முடியும்.

**பெற்றோர் மற்றும் சமூகத்தின் ஈடுபாடு**

1. பாலர்பள்ளிக் கல்வியைப் பற்றிய தெளிவும் கற்றல் கற்பித்தல் தடைகள் இன்றி நடைபெற அவர்களின் ஒத்துழைப்பைப் பெறுவதற்கும் பாலர்பள்ளி கல்வித்திட்டத்தின் அமலாக்கத்தைப் பெற்றோர்/பாதுகாவலர்களிடம் விளக்கம் தர வேண்டும்.
2. பெற்றோர்/பாதுகாவலர், ஆசிரியர் இடையிலான தகவல் பரிமாற்றம் மாணவர்களின் கற்றலுக்கு உதவுவதோடு பள்ளியிலிருந்து வீட்டிற்கும் கற்றல் கற்பித்தல் தொடருவதை உறுதிப்படுத்துகிறது.
3. பள்ளி, பெற்றோர்/பாதுகாவலர் இடையிலான சுமூகமான உறவு கற்றல் அனுபவத்தையும் நேர்மறையான விளைவுகளையும் மாணவர்களின் கற்றலுக்குத் தருகின்றது.

**சிறப்புத் தேவை மாணவர்கள்**

1. கற்றல் சிக்கலைத் தீர்க்க சிறப்புத் தேவை மாணவர்களை அடையாளம் கண்டு தொடர் நடவடிக்கையை மேற்கொள்ள ஆசிரியர் திட்டமிட வேண்டும்.

மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கைகள் பின்வருமாறு:

- மாணவர்களின் கற்றல் நிலை மற்றும் வேறுபாட்டினை அடையாளம் கண்டு அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் கற்றல் கற்பித்தலைத் திட்டமிட வேண்டும்.
- மாணவர்களின் கைவண்ணங்களைச் சேகரிக்கவும் கற்றல் மற்றும் வளர்ச்சிதனைக் குறிக்கவும் கோப்புகளைத் தயார்படுத்த வேண்டும்.
- பயனுள்ள கற்றல் கற்பித்தலுக்காக உள்ளடக்கங்களையும் கற்றல் நடவடிக்கைகளையும் பல்வகைப்படுத்துதல் வேண்டும்.
- மாணவர்களின் தேவைக்கேற்பப் பயிற்றுத் துணைப் பொருள்களை மாற்றி அமைக்க வேண்டும்.

2. கற்றலில் சிக்கலை எதிர்நோக்கும் மாணவர்களைக் கண்டறிய ஆசிரியர்கள் சிறப்புத் தேவை மாணவர்களைக் கண்டறியும் செயற்கருவியைப் (IMPaK) (4-6 வயது) பயன்படுத்தலாம். சிறப்புத் தேவை அம்சங்களைக் கொண்ட மாணவர்களின் பெற்றோர்/பாதுகாவலருடன் ஆசிரியர் கலந்துரையாடுதல் வேண்டும். கற்றல் சிக்கலை உறுதி செய்ய மருத்துவரைக் காணச் செல்லும் போது இச்செயற் கருவியை எடுத்துச் செல்ல வேண்டும்.

## விரவி வரும் கூறுகள்

விரவி வரும் கூறுகள் உள்ளடக்கத் தரத்தில் வரையறுக்கப்பட்டுள்ளவற்றைத் தவிர்த்துக் கற்றல் கற்பித்தலில் கூடுதலாக இணைக்கப்பட வேண்டிய கூறுகளாகும். இவை, மாணவர்களின் திறனையும் சால்பையும் திடப்படுத்துகின்றன. தற்கால, எதிர்காலச் சவால்களை எதிர்கொள்ளும் சமன்நிலையிலான மனித மூலதனத்தை உருவாக்குவதற்காகவே கற்றல் கற்பித்தலில் கீழ்க்கண்ட விரவி வரும் கூறுகள் இணைக்கப்பட்டிருக்கின்றன.

### 1. மொழி

- எல்லாப் பாடங்களிலும் மொழி சரியாகப் பயன்படுத்தப்படுவதை உறுதி செய்தல் வேண்டும்.
- மாணவர்கள் தங்களின் ஏடல்களை விளைபயன்மிக்க வகையில் நல்ல மொழியைப் பயன்படுத்தி வெளிப்படுத்த உதவும் வகையில் ஒவ்வொரு பாட கற்றல் கற்பித்தலின் போதும் ஆசிரியர் மாணவர்களின் உச்சரிப்பு, வாக்கிய அமைப்பு, இலக்கணம், கலைச்சொல் பயன்பாடு, மொழிநடை ஆகியவற்றில் கவனம் செலுத்துதல் வேண்டும்.

### 2. சுற்றுச்சூழல் நிலைத்தன்மையைப் பராமரித்தல்

- அனைத்துப் பாட கற்றல் கற்பித்தலின் போதும் சுற்றுச்சூழலை நேசித்தல், பராமரித்தல் ஆகியவற்றின் முக்கியத்துவத்தின் விழிப்புணர்வை மாணவர்களின் மனத்தில் பதிய வைக்க வேண்டும்.
- சுற்றுச்சூழல் தொடர்பான அறிவும் விழிப்புணர்வும் மாணவரிடையே சுற்றுச்சூழலைப் பேணிக்காக்கும் பண்பை வளர்க்க உதவும்.

### 3. நன்னெறிப் பண்பு

- மாணவர்கள் நற்பண்பின் முக்கியத்துவத்தை உணர்ந்து அதனைக் கடைப்பிடிக்கும் பொருட்டு அனைத்துப் பாடங்களிலும் நன்னெறிப் பண்பு வலியுறுத்தப்பட வேண்டும்.

- ஆன்மிகம், மனிதவியல், குடியியல் ஆகிய நன்னெறிப் பண்பு அன்றாட வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய கூறுகளாகும்.

**4. அறிவியலும் தொழில்நுட்பமும்**

- மாணவர்களிடையே அறிவியல், தொழில்நுட்ப ஆர்வத்தை வளர்ப்பதன்வழி அவர்களின் அறிவியல், தொழில்நுட்ப அறிவை மேம்படுத்த இயலும்.
- கற்றல் கற்பித்தலில் பயன்படுத்தப்படும் தொழில்நுட்பம், விளைபயன்மிக்க கற்றலை உருவாக்க உதவும்.
- கற்றல் கற்பித்தலில் அறிவியல், தொழில்நுட்ப இணைப்பு கீழ்க்கண்ட நான்கு கூறுகளை உள்ளடக்கியுள்ளது.

(i) அறிவியல், தொழில்நுட்ப அறிவு (அறிவியல், தொழில்நுட்பம் சார்ந்த கருத்து, கோட்பாடு, கருத்துக்கோடல்)

(ii) அறிவியல்திறன்

(அறிவியல் சிந்தனையும் கையாளும் திறனும்)

(iii) அறிவியல் பண்பு (துல்லியம், நேர்மை, பாதுகாப்பு)

(iv) கற்றல் கற்பித்தலில் தொழில்நுட்பப் பயன்பாடு

**5. நாட்டுப்பற்று**

- எல்லாப் பாடங்கள், புறப்பாட நடவடிக்கைகள், சமூக சேவைகள் ஆகியவற்றின்வழி மாணவர்களிடையே நாட்டுப்பற்றை வளர்க்க இயலும்.
- நாட்டை நேசிக்கும் மலேசியக் குடிமகன் என்ற பெருமிதம் கொண்ட மாணவர்களை உருவாக்க இயலும்.

**6. ஆக்கமும் புத்தாக்கமும்**

- ஆக்கம் என்பது கற்பனை ஆற்றலைக் கொண்டு ஏடலைச் சேகரித்துப் பகுத்தாய்ந்து புதிதான அல்லது அசலான ஒன்றை உருவாக்குவதாகும்.
- ஆக்கச் சிந்தனையின்வழி ஏடலை மாற்றம் செய்து சீர்செய்து அதனை அமலாக்கப்படுத்துவதே புத்தாக்கம் ஆகும்.
- ஆக்கமும் புத்தாக்கமும் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்பைக் கொண்டிருக்கின்றன. இவை 21ஆம் நூற்றாண்டின் சவால்களை எதிர்கொள்ளும் மனித மூலதனத்தை உருவாக்குவதில் பெரும் பங்காற்றுகின்றன.
- ஆக்கப் புத்தாக்கக் கூறுகள் கற்றல் கற்பித்தலில் முறையாக இணைக்கப்படுதல் வேண்டும்.

**7. தொழில்முனைப்பு**

- தொழில்முனைவருக்கு இருக்க வேண்டிய தன்மைகளை மாணவர்களிடையே உருவாக்குவதையும் அவற்றை வாழ்வியல் பண்பாடாக வழக்கப்படுத்துவதையும் தொழில்முனைப்புக் கூறு நோக்கமாகக் கொண்டுள்ளது.

- சுறுசுறுப்பு, நேர்மை, நம்பகத்தன்மை, பொறுப்புணர்ச்சி, ஆக்கப் புத்தாக்கச் சிந்தனை போன்றவற்றைக் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளில் புகுத்துவதன்வழி தொழில்முனைப்புத் திறனை மாணவர்களிடையே வளர்க்க இயலும்.

**8. தகவல் தொடர்புத் தொழில்நுட்பம்**

- தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தைக் கற்றல் கற்பித்தலில் இணைப்பதன்வழி மாணவர்கள் தகவல் தொடர்புத் தொழில்நுட்ப அறிவையும் பயன்பாட்டினையும் அறிவதோடு அவற்றைத் திடப்படுத்திக்கொள்ளவும் முடியும்.

- தகவல் தொடர்புத் தொழில்நுட்பம் மாணவர்களை ஆக்கச் சிந்தனை உடையவர்களாக உருவாக்குவதோடு கற்றல் கற்பித்தல் கவர்ச்சிகரமானதாகவும் மகிழ்ச்சியூட்டுவதாகவும் அமைய வழிவகுக்கும். இதன்வழி, மாணவர்களின் கற்றல் தரம் உயரும்.

- தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தின் கூறுகள் கற்றல் கற்பித்தலுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைப்புக்குப் பொருத்தமானதாக அமைவதை ஆசிரியர் உறுதி செய்ய வேண்டும். இது, மாணவர்கள் பாடத்தின் உள்ளடக்கத்தைச் சிறந்த முறையில் விளங்கிக்கொள்ள வழிவகுக்கும்.

**9. உலகளாவிய நிலைத்தன்மை**

- உற்பத்தி மற்றும் பயன்பாடு, உலகளாவிய குடிமை, ஒற்றுமை ஆகியவற்றின்வழி கிடைக்கப்பெறுகின்ற அறிவையும் திறனையும் பண்பையும் அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்தி, சுற்றுச்சூழலைப் பொறுப்புடன் கையாளுவதற்குத் தேவைப்படும் நிலைத்தன்மையான சிந்தனையைப் பெற்ற மாணவரை உருவாக்குவதையே உலகளாவிய நிலைத்தன்மைக்கூறு நோக்கமாகக் கொண்டுள்ளது.

- உள்ளூர், நாடு, உலகளாவிய சவால்களையும் நிகழ்கால சிக்கல்களையும் மாணவர்கள் எதிர்நோக்க உலகளாவிய நிலைத்தன்மைக்கூறு முக்கியமாகக் கருதப்படுகின்றது.

## 10. நிதிக்கல்வி

- நிதிக்கல்விக்கூறு பொறுப்புள்ள வகையில் நிதியை நிர்வகிக்கவும் நேர்மையான வகையில் நிதி நிர்வாகத்தைச் செயல்படுத்தவும் அறிவார்ந்த நிலையில் நிதி தொடர்பான முடிவெடுக்கவும் கூடிய திறமையான எதிர்காலச் சமுதாயத்தை உருவாக்கும் நோக்கத்தைக் கொண்டுள்ளது.

- நிதிக்கல்விக்கூறு மாணவர்களுக்கு நேரிடையாகவும் இடைச்செருகலாகவும் கற்பிக்கப்படுகிறது. வட்டி கணக்கீட்டு முறை போன்ற நிதி தொடர்பான தலைப்புகள் நேரிடையாகக் கற்பிக்கும் வகையில் தர ஆவணத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. மற்றத் தலைப்புகள் இடைச்செருகலாக விரவி வரும் கூறுகள் அணுகுமுறையில் கற்பிப்பதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. விளைபயன்மிக்க வகையில் நிதி நிர்வாகத்தை மேற்கொள்ள மாணவர்களுக்கு நிதிக்கல்வி மிக முக்கியமாகக் கருதப்படுகின்றது.

## பள்ளி மதிப்பீடு

பள்ளி மதிப்பீடு என்பது மதிப்பீட்டு அணுகுமுறையில் ஒரு பகுதி. இது மாணவர்களின் வளர்ச்சியைப் பற்றிய தகவல்களைப் பெறுவதற்கான ஒரு செயல்முறையாகும். இதனை ஆசிரியர் திட்டமிட்டு, அமல்படுத்தி அறிக்கை தயாரிக்க வேண்டும். இச்செயல்முறையைத் தொடர்ச்சியாக அதிகாரபூர்வ மற்றும் அதிகாரபூர்வமற்ற முறையில் நடத்தலாம். இஃது ஆசிரியர், மாணவரின் உண்மையான அடைவு நிலையைத் தீர்மானிப்பதற்கு உதவுகின்றது. பள்ளி மதீப்பீடு முழுமையாகவும் நம்பத்தகுந்ததாகவும் உள்ளடக்கிய அடிப்படையிலும் வட்டார ரீதியிலும் நடத்த வேண்டும். பள்ளி மதிப்பீட்டின் வழி கிடைக்கப்பட்ட தகவலை மாணவர்களின் கல்வி வளர்ச்சியை மேம்படுத்துவதற்கான தொடர் நடவடிக்கையைத் திட்டமிடுவதற்குப் பள்ளி நிர்வாகம், ஆசிரியர், பெற்றோர் மற்றும் மாணவர்கள் பயன்படுத்தலாம்.

பள்ளி மதிப்பீட்டை ஆசிரியர் அதிகாரபூர்வ முறையிலும் அதிகாரபூர்வமற்ற முறையிலும் நடத்தலாம். அதிகாரபூர்வ மதிப்பீடு கற்றல் கற்பித்தலின் போதே நடத்தப்பட வேண்டும். அதிகாரபூர்வ மற்ற மதிப்பீட்டை ஒவ்வொரு கற்றல் தொகுதியிலும் பள்ளிப் பருவ இறுதியிலும் ஆண்டு இறுதியிலும் நடத்தலாம். பாலர்பள்ளிக்கான தர அடிப்படையிலான தேசியக் கலைத்திட்ட ஆவணத்தை மையமாகக் கொண்டு பள்ளி மதிப்பீட்டைத் திட்டமிடுதல், கேள்விகளைத் தயாரித்தல், நிர்வகித்தல், சோதித்தல், குறிப்பெடுத்தல் மற்றும் அடைவு நிலை அறிக்கையைத் தயாரிக்க வேண்டும். தொடர்ச்சியான பல்வகை

நோக்குதல் மூலம் மாணவர்களின் முழுமையான ஒட்டுமொத்த நடவடிக்கைகளையும் மதிப்பீடு செய்ய வேண்டும். அதாவது உற்றறிதல், படைப்பு, வாய்மொழி பதில்கள், குழு நடவடிக்கைகள் போன்றவையாகும். மாணவர்களின் ஒட்டுமொத்த அடைவுநிலையை ஆசிரியர் தொழிற்றகைமை அடிப்படையிலும் விவேகத்துடனும் நிர்ணயம் செய்தல் வேண்டும்.

பல்வகை அணுகுமுறையின் வழி மாணவர்களின் கல்வி வளர்ச்சியைக் கண்டறிவதே பாலர்பள்ளியின் மதிப்பீடு. இஃது ஓர் அடிப்படையான மற்றும் முக்கியமான கற்றல் கற்பித்தலில் தொடர்ச்சியான செயல்முறையாகும்.

அட்டவணை 3: அடைவுநிலைக்கான விவரிப்பு

| தர அடைவு | |
|---|---|
| **அடைவு நிலை** | **விவரிப்பு** |
| 1 | மாணவர்கள் அடிப்படை விவரங்களை அறிந்திருப்பர்; அடிப்படை திறன்களை செய்வர் அல்லது அடிப்படை விவரங்களுக்கு ஏற்பத் துலங்குவர். |
| 2 | மாணவர்கள் அறிவையும் திறனையும் கொண்டு ஒன்றனை மேற்கொள்வர். |
| 3 | மாணவர்கள் அறிவையும் திறனையும் கொண்டு முறையாகவும் பண்புடனும் புதிய சூழலில் சூழலுக்கேற்ப ஆக்கத்துடன் செயல்படுவர். |

பாலர்பள்ளியின் மதிப்பீட்டின் நோக்கம் பின்வருமாறு:

1. மாணவர்களின் வளர்ச்சி அவர்களின் வயதுக்கு ஏற்றவாறு உள்ளதா என ஆராய்தல்.
2. மாணவர்களின் நுண்ணறிவையும் ஆற்றலையும் கண்டறிந்து வலுப்படுத்துதல் மற்றும் முழுமையாக வளர்ச்சியடையச் செய்தல்.
3. கற்றலில் மாணவர்களின் குறைநிறைகளை அவ்வப்போது கண்டறிதல்.
4. பாலர்பள்ளிக்கான தர அடிப்படையிலான தேசியக் கலைத்திட்ட ஆவணத்தின் அனைத்து அம்சங்களிலும் மாணவரின் அடைவு நிலையை மாணவர், பெற்றோர் மற்றும் பள்ளி நிர்வாகத்திற்குத் தெரிவித்தல்.
5. ஆசிரியரின் போதனாமுறை, கற்றல் வாய்ப்பு மற்றும் கற்றல் சூழல் ஆகியவற்றின் விளைபயனை அறிதல்.
6. கீழ்க்காண்பவை தொடர் நடவடிக்கையைத் திட்டமிட ஆசிரியருக்கு உதவும்:
    - மாணவர்களின் திறனை முழுமையாக வளர்ச்சியடையச் செய்தல்
    - மாணவர்களின் கற்றலில் உதவுதல்
    - ஆசிரியரின் கற்பித்தலைச் சரி செய்தல்

**பாலர்பள்ளி மதிப்பீட்டின் செயல்பாட்டுக் கோட்பாடுகள்**

1. பாலர்பள்ளிக்கான தர அடிப்படையிலான தேசியக் கலைத்திட்டத்தின் தர மற்றும் மதிப்பீட்டு ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள அறிவு, உணர்வு மற்றும் உள ஆற்றல் செயற்பாடு போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீடு செய்யப்படுகிறது.
2. வரையறுக்கப்பட்ட நோக்கத்திற்கு ஏற்ப மதிப்பீடு மேற்கொள்ளப்படுகிறது.
3. பள்ளிக்காலத்தில் தொடர்ச்சியாக இம்மதிப்பீடு நடத்தப்படுகிறது.
4. இம்மதிப்பீட்டு முறை மாணவர்களின் வளர்ச்சிக்கேற்பவும் நம்பகத்தன்மையாகவும் ஏற்புடையதாகவும் அமைதல் வேண்டும். அதோடு அறிவியல் சார்ந்ததாக இருத்தல் அவசியம்.
   - மதிப்பீடு மாணவர்களுக்கிடையே ஒப்பீடு செய்யாமல் அடிப்படை கூறுகளைக் கொண்டு நடத்த வேண்டும்.
   - இம்மதிப்பீட்டு முறையானது தொடர்ச்சியான உற்றுணர்தல் மற்றும் மாணவர்களின் படைப்புகளை மதிப்பீடு செய்தல் ஆகும். அதிகாரபூர்வ சோதனை நடத்தக் கூடாது.
   - சரியான மற்றும் ஏற்புடைய முடிவுகளைப் பெற, தரவுகளை முறையாக ஆய்வு செய்ய வேண்டும்.
   - ஆவண மதிப்பீடு முறையாக இருத்தல் வேண்டும். மதிப்பீடு பதிவுகள்: எ.கா:- சரிபார்ப்புப் பட்டியல், அளவில் விகிதம், விவரப்பதிவுகள், தொடர்ச்சியான பதிவுகள், மாதிரி நேரம் மற்றும் மாதிரி நிகழ்வு.
5. மதிப்பீடு சிறுவர்களின் உரிமைகளைக் கருத்தில் கொண்டும் சரியான நெறிமுறையிலும் நடத்தப்படுதல் வேண்டும்.

## உள்ளடக்க அமைப்பு

பாலர்பள்ளிக்கான தர அடிப்படையிலான தேசியக் கலைத்திட்டத்தின் தர மற்றும் மதிப்பீட்டு ஆவணம் மூன்று அம்சங்களுக்கு முக்கியத்துவம் வழங்குகிறது. அவை உள்ளடக்கத் தரம், கற்றல் தரம் மற்றும் தர அடைவு என்பவையாகும். அட்டவணை 4 அவற்றை விளக்குகிறது.

அட்டவணை 4: தர விவரிப்பு

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் | தர அடைவு |
|---|---|---|
| வரையறுக்கப்பட்ட பள்ளி கால அளவில் மாணவர்கள் கல்வி தொடர்பான அறிவு, திறன், பண்புநெறி ஆகிய கூறுகளை உள்ளடக்கிய கூற்றினைப் பற்றித் தெரிந்து கொள்வதையும் | ஒவ்வோர் உள்ளடக்கத் தரத்திற்கேற்பத் தரமான கற்றல், அடைவுநிலை ஆகியவற்றை உறுதி செய்வதே கற்றல் தரமாகும். | தர அடைவு என்பது மாணவர்களின் கற்றல் அடைவுநிலையை விவரிக்கும் ஒன்றாகும். இது மாணவர்களின் கற்றல் வளர்ச்சி |

| | | |
|---|---|---|
| அதன்படி இயங்குவதையும் உறுதிப்படுத்துவதே உள்ளடக்கத் தரமாகும். | | நிலையைக் காட்டுவதாகும். |

**குறைந்தபட்ச நேர ஒதுக்கீடு**

பரிந்துரைக்கப்பட்ட பாலர்பள்ளிக்கான குறைந்தபட்ச நேர ஒதுக்கீட்டில் கடைப்பிடிக்க வேண்டியவை:

1. 5+ வயது மாணவர்களுக்குப் பாலர்பள்ளி வகுப்புகள் ஒரு நாளைக்குக் குறைந்தது நான்கு மணி நேரம் நடத்தப்பட வேண்டும். (ஓய்வு நேரமும் சேர்த்து) அஃதாவது ஒரு வாரத்திற்கு 20 மணி நேரம்.
2. 4+ வயது மாணவர்களுக்குப் பாலர்பள்ளி வகுப்புகள் ஒரு நாளைக்குக் குறைந்தது 3 மணி 30 நிமிடம் நடத்தப்பட வேண்டும். (ஓய்வு நேரமும் சேர்த்து) அஃதாவது ஒரு வாரத்திற்கு 17 மணி 30 நிமிடம்.
3. மலாய் மொழியைத் தொடர்பு மொழியாகப் பயன்படுத்தும் பாலர்பள்ளியில் ஒரு வாரத்திற்குக் குறைந்தது 600 நிமிடங்கள் மலாய் மொழியைக் கற்பித்தல் மொழியாகப் பயன்படுத்த வேண்டும்.
4. மலாய் மொழியைத் தொடர்பு மொழியாகப் பயன்படுத்தாத பாலர்பள்ளியில் ஒரு வாரத்திற்குக் குறைந்தது 400 நிமிடங்கள் மலாய் மொழியைக் கற்பித்தல் மொழியாகப் பயன்படுத்த வேண்டும்.
5. மலாய் மொழியைத் தொடர்பு மொழியாகப் பயன்படுத்தும் பாலர்பள்ளியில் ஒரு வாரத்திற்குக் குறைந்தது 600 நிமிடங்கள் ஆங்கில மொழியைக் கற்பித்தல் மொழியாகப் பயன்படுத்த வேண்டும்.
6. மலாய் மொழியைத் தொடர்பு மொழியாகப் பயன்படுத்தாத பாலர்பள்ளியில் ஒரு வாரத்திற்குக் குறைந்தது 400 நிமிடங்கள் ஆங்கில மொழியைக் கற்பித்தல் மொழியாகப் பயன்படுத்த வேண்டும்.
7. 5 அல்லது அதற்கும் மேற்பட்ட இஸ்லாம் மாணவர்கள் பயிலும் பாலர்பள்ளியில் அம்மாணவர்களுக்குக் குறைந்தது வாரத்தில் இரண்டு மணி நேரம் தகுதிபெற்ற ஆசிரியர்களைக் கொண்டு இஸ்லாமியக் கல்வி போதிக்கப்பட வேண்டும்.
8. 5 அல்லது அதற்கும் மேற்பட்ட இஸ்லாம் அல்லாத மாணவர்கள் பயிலும் பாலர்பள்ளியில் அம்மாணவர்களுக்குக் குறைந்தது வாரத்தில் இரண்டு மணி நேரம் நன்னெறிக் கல்வி போதிக்கப்பட வேண்டும்.

**கற்றல் கற்பித்தலுக்கான நேர ஒதுக்கீடு**

| PM 3.1 தன் கடமையை நிறைவேற்றுவர் | **மாணவர்கள்:**<br><br>PM 3.1.1 தன் கடமைகளைக் கூறுவர்<br><br>PM 3.1.2 தனது கடமைகளை அமல்படுத்துவர் | **மாணவர்கள்:**<br><br>PM 3.1.3 வீட்டில் தன் கடமைகளைக் கூறுவர்<br><br>PM 3.1.4 வகுப்பறையில் கொடுக்கப்பட்ட கடமைகளை நிறைவேற்றுவர் |

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் | |
|---|---|---|
| | **4+** | **5+** |
| **PM 4.0 நன்றி நவிலும் மனப்பான்மை** | | |
| PM 4.1 வழங்கப்பட்ட அன்பளிப்பு, உதவி, சேவை ஆகியவற்றிற்கு நன்றி உணர்வை வெளிப்படுத்துவர் | **மாணவர்கள்:**<br><br>PM 4.1.1 எழுத்து, வாய்மொழியாக நன்றி நவில்வர் | **மாணவர்கள்:**<br><br>PM 4.1.2 வழங்கப்பட்ட அன்பளிப்பு, உதவி, சேவை ஆகியவற்றிற்குப் பல்வேறு வகையில் நன்றி நவில்வர் |
| **PM 5.0 உயர்வெண்ணம்** | | |
| PM 5.1 பேச்சிலும் நடத்தையிலும் பணிவைக் கடைப்பிடிப்பர் | **மாணவர்கள்:**<br><br>PM 5.1.1 பணிவான பேச்சிலும், நடத்தையிலும் முன்னுதாரணமாக விளங்குவர் | **மாணவர்கள்:**<br><br>PM 5.1.2 பிறருடன் பண்பான பேச்சையும் நடத்தையையும் கடைப்பிடிப்பர் |
| **PM 6.0 மரியாதை** | | |
| PM 6.1 மதிக்கும் மனப்பான்மையைக் கடைப்பிடிப்பர் | **மாணவர்கள்:**<br><br>PM 6.1.1 மற்றவர்களை மதிப்பதில் முன்னுதாரணமாக விளங்குவர் | **மாணவர்கள்:**<br><br>PM 6.1.2 பல்வேறு சூழ்நிலைகளில் மதிக்கும் மனப்பான்மையை வெளிப்படுத்தும் முறைகளைக் கூறுவர்<br><br>PM 6.1.3 பிறரை மதிக்கும் மனப்பான்மையை வெளிப்படுத்துவர் |

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் | |
|---|---|---|
| | 4+ | 5+ |
| **PM 7.0 அன்புடைமை** | | |
| PM 7.1 தன்னையும் மற்றவரையும் பிராணிகளையும் நேசிப்பர் | **மாணவர்கள்:**<br><br>PM 7.1.1 தன்னையும் மற்றவரையும் பிராணிகளையும் நேசிக்கும் முறைகளைக் கூறுவர் | **மாணவர்கள்:**<br><br>PM 7.1.2 தன்னையும் மற்றவரையும் பிராணிகளையும் நேசிப்பதை வெளிப்படுத்துவர் |
| **PM 8.0 நடுவுநிலைமை** | | |
| PM 8.1 பிறருடன் பழகும் போது நடுவுநிலைமையைக் கடைப்பிடிப்பர் | **மாணவர்கள்:**<br><br>PM 8.1.1 நடுவுநிலைமையைக் குறிக்கும் செயல்களைக் கூறுவர் | **மாணவர்கள்:**<br><br>PM 8.1.2 நீதியை நிலைநாட்டும் நடவடிக்கைகளை அடையாளம் காணுவர்<br><br>PM 8.1.3 நடவடிக்கைகளில் நடுவுநிலைமையைக் கடைப்பிடிப்பர் |
| **PM 9.0 துணிவு** | | |
| PM 9.1 அன்றாட வாழ்வில் துணிவுடன் செயல்படுவர் | **மாணவர்கள்:**<br><br>PM 9.1.1 பிறருடன் துணிவுடன் உரையாடுவர் | **மாணவர்கள்:**<br><br>PM 9.1.2 புதிய இடுபணிகளில் துணிவுடன் ஈடுபடமுனைவர் |

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் | |
|---|---|---|
| | 4+ | 5+ |
| **PM 10.0 நேர்மை** | | |
| PM 10.1 அன்றாட வாழ்வில் நேர்மையாக நடந்து கொள்வர் | **மாணவர்கள்:**<br>PM 10.1.1 நேர்மையாக நடந்து கொள்ளும் செயல்களைக் கூறுவர்<br>PM 10.1.2 நேர்மையாக நடந்து கொள்வதால் ஏற்படும் நன்மைகளைக் கூறுவர் | **மாணவர்கள்:**<br>PM 10.1.3 நேர்மையைக் குறிக்கும் பல்வேறு சூழல்களை அடையாளம் காணுவர்<br>PM 10.1.4 பிறருடன் உண்மையைப் பேசுவர் |
| **PM 11.0 ஊக்கமுடைமை** | | |
| PM 11.1 அன்றாட வாழ்க்கையில் ஊக்கத்துடன் செயல்படுவர் | **மாணவர்கள்:**<br>PM 11.1.1 ஊக்கமுடைமையைக் குறிக்கும் பல்வேறு சூழல்களைக் கூறுவர் | **மாணவர்கள்:**<br>PM 11.1.2 கொடுக்கப்பட்ட இடுபணிகளை ஊக்கத்துடன் செய்வர் |
| PM 12.1 இடுபணிகளை ஒன்றிணைந்து செய்வர் | **மாணவர்கள்:**<br>PM 12.1.1 இடுபணிகளைச் செயல்படுத்தும் போது ஒத்துழைப்பை வெளிப்படுத்துவர் | **மாணவர்கள்:**<br>PM 12.1.2 ஒன்றிணைந்து பணிகளை மேற்கொள்வதால் ஏற்படும் நன்மைகளைக் கூறுவர்<br>PM 12.1.3 கொடுக்கப்பட்ட பணிகளை நண்பர்களோடு ஒன்றிணைந்து செய்வர் |

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் | |
|---|---|---|
| | 4+ | 5+ |
| **PM 13.0 மிதமான மனப்பான்மை** | | |
| PM 13.1 அன்றாட வாழ்வில் மிதமான போக்கைக் கடைப்பிடிப்பர் | **மாணவர்கள்:**<br><br>PM 13.1.1 பொருள்களையும் மூலங்களையும் சிக்கனமாகப் பயன்படுத்தும் வழிகளைக் குறிப்பிடுவர் | **மாணவர்கள்:**<br><br>PM 13.1.2 பொருள்களையும் மூலங்களையும் சிக்கனமாகப் பயன்படுத்துவதால் ஏற்படும் நன்மைகளைக் கலந்துரையாடுவர்<br><br>PM 13.1.3 பொருள்களையும் மூலங்களையும் சிக்கனமாகப் பயன்படுத்தும் போக்கைக் காட்டுவர் |
| **PM 14.0 விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை** | | |
| PM 14.1 விட்டுக்கொடுத்துப் பழகுவர் | **மாணவர்கள்:**<br><br>PM 14.1.1 நண்பர்களுடன் விட்டுக்கொடுத்துப் பழகும் சூழல்களைக் கூறுவர் | **மாணவர்கள்:**<br><br>PM 14.1.2 நண்பர்களுடன் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையை வெளிப்படுத்துவர் |

**நன்னெறி பண்புகளின் விளக்கம்**

| நெறி | நெறி பொருள் |
|---|---|
| இறை நம்பிக்கை | தேசியக் கோட்பாட்டின்படி இறைவன் உள்ளார் என்பதிலும் இவ்வுலகைப் படைத்தவர் என்பதிலும் உறுதிகொள்வதோடு அவரது எல்லாக் கட்டளைகளையும் தத்தம் சமயம் அல்லது நம்பிக்கைக்கு ஏற்றவாறு பின்பற்றுதல். |
| நன்மனம் | தன்னலம், பிறர்நலம் ஆகியவற்றை உணர்ந்து தேவையான உதவியையும் ஆதரவையும் உளத்தூய்மையாக வழங்குதல். |
| கடமையுணர்வு | கொடுக்கப்பட்ட பொறுப்பு, கடமை ஆகியவற்றை ஏற்பதிலும் முழுமையாக ஆற்றுவதிலும் ஆற்றல் கொண்டிருத்தல். |
| நன்றி நவில்தல் | உணர்வு அல்லது செயல்வழி ஒப்புதல் வழங்குதலும் நன்றி பாராட்டுதலும். |
| உயர்வெண்ணம் | பணிவையும் நன்னடத்தையையும் கடைப்பிடித்தல். |
| மரியாதை | ஒருவரை நன்றி பாராட்டுதலும் போற்றுதலும் சமுதாய அமைப்பின் விதிமுறைகளை மதித்தலும். |
| அன்புடைமை | உள்ளத்திலிருந்து அக்கறையுணர்வும் |

| நெறி | நெறி பொருள் |
|---|---|
| | அன்பும் தோன்றுதல். |
| நடுவுநிலைமை | செயற்பாட்டிலும் முடிவெடுத்தலிலும் சார்பின்றிச் செயல்படுதல். |
| துணிவு | அறைகூவல்களை நம்பிக்கையோடும் மனவுறுதியோடும் எதிர்கொள்ளல். |
| நேர்மை | உண்மை உரைத்தல், நாணயமாக நடத்தல், ஒவ்வொரு செயலிலும் உளத்தூய்மை கொண்டிருத்தல். |
| ஊக்கமுடைமை | ஒருசெயலைச் செய்வதில் விடாமுயற்சி, ஊக்கம், அர்ப்பணிப்பு உணர்வு கொண்டிருத்தல். |
| ஒத்துழைப்பு | அனைவரின் நலனுக்காக ஒன்றிணைந்து செயல்படுதல். |
| மிதமான மனப்பான்மை | தன்னலமும் பிறர்நலமும் பாதிக்காத வகையில் சீர்தூக்கிப் பார்ப்பதிலும் நடப்பதிலும் மிதமானபோக்கைக் கடைப்பிடித்தல். |
| விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை | தன் வளத்துக்கும் பிறர் வளத்துக்கும் விட்டுக்கொடுத்தலும் பொறுத்தலும் தன்னைக் கட்டுப்படுத்துதலும். |

# சுய சால்புடைமை

# உத்திரம்

# சுய சால்புடைமை

சுய சால்புடைமை உத்திரம், தன்னுணர்வை அறியவும் நெறிப்படுத்தவும் சமூகவியல் திறனை வளர்த்துக் கொள்ளவும் முக்கியத்துவம் வழங்குகிறது. இவ்வளர்ச்சி, மாணவர்கள் சுயகருத்துரு ஆற்றலை வளர்த்துக் கொள்ளவும் வாழ்க்கையில் சவால்களை எதிர்கொள்ளவும் அடிப்படையாக அமைகிறது.

சுய சால்புடைமை உத்திரம் அடிப்படையிலான கற்றல் நடவடிக்கைக்குப் பின் மாணவர்கள்:

1. தன்னை அறிவர்.
2. தனது உணர்வையும் நடவடிக்கையையும் கட்டுப்படுத்தி நிர்வகிப்பர்.
3. மற்றவரின் பலதரபட்ட உணர்வுகளையும் கருத்துகளையும் மதிப்பர்.
4. சமுதாய வாழ்வில் சமூகவியல் திறனை வளர்த்துக் கொள்வர்.
5. பல்வேறு சவால்களை எதிர்கொள்ளும் நம்பிக்கையை வளர்த்துக் கொள்வர்.

அன்றாட நடவடிக்கை, தொடர்பு, வகுப்புச் சூழலைத் தயார் படுத்துதல், முறையான கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகள் ஆகியவை மூலம் சமூகவியல் திறனை விளைபயன்மிக்கதாக வளர்ப்பது ஆசிரியரின் கடமையாகும்.

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் | |
|---|---|---|
| | 4+ | 5+ |
| **KD 1.0 உணர்வை அறிதலும் நெறிப்படுத்தலும்** | | |
| KD 1.1 தன் உணர்வை அறிந்து நெறிப்படுத்துவர் | **மாணவர்கள்:**<br><br>KD 1.1.1 மகிழ்ச்சி, கவலை, கோபம், பயம், வெட்கம் போன்ற தன்னுடைய அனுபவங்களை உணர்ந்து கூறுவர்<br><br>KD 1.1.2 தனக்குப் பிடித்தது, பிடிக்காதது பற்றிக் கூறுவர்<br><br>KD 1.1.3 சூழலுக்கு ஏற்ற உணர்வைக் கூறுவர் | **மாணவர்கள்:**<br><br>KD 1.1.4 நடந்து முடிந்த ஒரு நிகழ்ச்சியைப் பற்றிய தங்களின் உணர்வுகளைப் பிறருக்குப் பல்வேறு முறைகளில் கூறுவர்<br><br>KD 1.1.5 உணர்வுகளைக் கையாளுவதற்குப் பொருத்தமான நடவடிக்கையைத் தேர்ந்தெடுப்பர் |
| KD 1.2 பிறரின் உணர்வை அறிவர் | **மாணவர்கள்:**<br><br>KD 1.2.1 மற்றவர்களின் உணர்வுகளை அவர்களின் செயல்பாட்டின் வழி அறிவர் | **மாணவர்கள்:**<br><br>KD 1.2.2 பிறரின் உணர்ச்சி வெளிப்பாடு மற்றும் நடந்த சம்பவங்கள் அடிப்படையில் அவர்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்வர்<br><br>KD 1.2.3 குறிப்பிட்ட சூழ்நிலையில் ஒவ்வொருவரின் உணர்வுகளை வேறுபடுத்துவர் |

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் | |
|---|---|---|
| | 4+ | 5+ |
| **KD 2.0 நேர்மறையான உணர்வை அடைவர்** | | |
| KD 2.1 சுயகருத்துருவை வளர்ப்பர் | **மாணவர்கள்:**<br><br>KD 2.1.1 நேர்மறை மனப்பான்மையை வெளிப்படுத்துவர்<br>(i) பொறுமை<br>(ii) சுயகாலில்நிற்றல்<br>(iii) தன்னம்பிக்கை<br>(iv) உதவுதல்<br>(v) பரிவு<br>(vi) நகைச்சுவை | **மாணவர்கள்:**<br><br>KD 2.1.2 நேர்மறை மனப்பான்மையை வெளிப்படுத்துவர்<br>(i) ஒற்றுமை<br>(ii) விசுவாசமிக்க நட்பு<br>(iii) அனுதாபம் |
| KD 2.2 சுயகட்டுப்பாட்டு ஆற்றலை வளர்த்துக் கொள்வர் | **மாணவர்கள்:**<br><br>KD 2.2.1 குறிப்பிட்ட சூழலில் விருப்பங்களையும் தேவைகளையும் வேறுபடுத்தித் தெரிவு செய்வர் | **மாணவர்கள்:**<br><br>KD 2.2.2 விரும்பத்தகாத சூழலில் உணர்ச்சியை நேர்மறையாகக் கட்டுப்படுத்தும் முறையைக் கூறுவர்<br><br>KD 2.2.3 விரும்பத்தகாத சூழலை எதிர்நோக்கும் பொழுது பொறுமையைக் கடைப்பிடிப்பர் |

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் | |
|---|---|---|
| | 4+ | 5+ |
| KD 2.3 தொடர்பு கொள்வதற்கான தன்னம்பிக்கயை வளர்த்துக் கொள்வர் | **மாணவர்கள்:**<br>KD 2.3.1 தன்னம்பிக்கையுடன் பேசுவர்<br>KD 2.3.2 தன்னம்பிக்கையுடன் கேள்வி கேட்பர் | **மாணவர்கள்:**<br>KD 2.3.3 தன்னம்பிக்கையுடன் தொடர்பு கொள்வர்<br>KD 2.3.4 தன்னம்பிக்கையுடன் பேசுவர்; கருத்துத் தெரிவிப்பர்<br>KD 2.3.5 பல்வகை தொடர்பு உத்திகளின் வழி தன் ஆற்றலை வெளிப்படுத்துவர் |
| **KD 3.0 சமூகவியல் திறனை வளர்த்தல்** | | |
| KD 3.1 பிறருடைய தேவைகள், ஆகியவற்றைப் புரிந்து கொள்வர் | **மாணவர்கள்:**<br>KD 3.1.1 பிறருடைய தேவைகளைப் பற்றிய உணர்திறனை வெளிப்படுத்தி அதற்கேற்பச் செயல்படுவர்<br>KD 3.1.2 ஒருவரின் செயல் மூலம் அவரின் உணர்வுகளைஅறிந்து கூறுவர் | **மாணவர்கள்:**<br>KD 3.1.3 பிறரின் கருத்துகளையும் உணர்வுகளையும் மதிப்பர் |

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் | |
|---|---|---|
| | 4+ | 5+ |
| KD 3.2 மற்றவருடன் தொடர்பு கொள்ளும் பொழுது சமுகவியல் திறனை பயன்படுத்துவர் | **மாணவர்கள்:**<br><br>KD 3.2.1 பிறரின் உடைமையை மதிப்பர்<br><br>KD 3.2.2 நடவடிக்கையில் ஈடுபடும் பொழுது பிறருடன் பொருள்களை பகிர்ந்து கொள்வர்<br><br>KD 3.2.3 நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஒரு விளையாட்டில் தங்களின் திறனை வெளிப்படுத்துவர் | **மாணவர்கள்:**<br><br>KD 3.2.4 ஒரு செயலின் ஒப்புதல் மற்றும் அதிருப்தியை பொருத்தமான வகையில் கூறுவர்<br><br>KD 3.2.5 குறிப்பிட்ட சூழலில் சமூகவியலுக்காக தன்னை தயார்படுத்தி கொள்வர்<br><br>KD 3.2.6 சமூக நெறிகளை உறவுகளில் நடைமுறைப் படுத்துவர் |

# சொற்களஞ்சியம்

| எண் | சொல் | பொருள் |
|---|---|---|
| 1. | சமூக நெறிமுறைகள் | சமூகவியல் தொடர்பான அனைத்து அறிவும் பண்பும். |
| 2. | சமூகவியல் திறன் | தொடர்பு கொள்ளும் போது, வாய்மொழியாகவோ பேச்சின்றியோ பொருத்தமான துலங்குதலை வெளிப்படுத்தும் ஆற்றல். |
| 3. | சுயகருத்துரு | தன்னைப் பற்றி நேர்மறையான அல்லது எதிர்மறையான தனது கருத்து. |

# உடல் வளர்ச்சி, முருகுணர்ச்சி உத்திரம்

# உடல் வளர்ச்சியும் சுகாதாரம் பேணுதலும்

உடல் வளர்ச்சியும் சுகாதாரம் பேணுதலும் இரண்டு கூறுகளை உள்ளடக்கியுள்ளது. அவை:

1. உடல் வளர்ச்சி

   உடல் வளர்ச்சி எனப்படுவது அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான பல்வேறு இயக்கங்களுக்கு அடிப்படையாக இருக்கும் மென் இயக்கத் திறன், வன் இயக்கத் திறன், கையாளும் திறன், தாளத்திற்கேற்ற அசைவு ஆகிய திறன்களை உள்ளடக்கியுள்ளது. இது சுறுசுறுப்பு, அறிவாற்றல், திறமை, உடல் இயக்க ஒருங்கிணைப்பு, சுகாதாரம் ஆகியவற்றுக்கு அவசியமாகும்.

2. சுகாதாரம் பேணுதல்

   உடல்நலம், இனவிருத்தி மற்றும் சமுகவியல் கல்விக்கு (PEERS) முக்கியத்துவம் வழங்குகிறது. மாணவர்களின் அன்றாட வாழ்வில் சுகாதாரம், பாதுகாப்பு, உணவு முறை ஆகியவை பற்றிய விழிப்புணர்வு சிறு வயதிலிருந்தே பழக்கப்படுத்தப்பட்டால் வழக்கமாகி விடும்.

உடல் வளர்ச்சியும் சுகாதாரம் பேணுதலுக்கான கற்றல் நடவடிக்கைக்குப் பின் மாணவர்கள்:

(i) பல்வகையான மென் இயக்க, வன் இயக்கப் பயிற்சிகளைச் செய்வர்.
(ii) உடலைச் சமநிலைப்படுத்தியும் கட்டுப்படுத்தியும் இயக்குவர்.
(iii) பல்வகையான இயக்கங்களை ஆராய்வர்.
(iv) பல்வகை கையாளும் திறன்களைப் பயன்படுத்துவர்.
(v) ஆரோக்கியமான வாழ்க்கை முறையைச் சமச்சீர் உணவு வழியும் சுயத் தூய்மை வழியும் அமல்படுத்துவர்.
(vi) தன்னைத் தற்காத்துக் கொள்ளவும் பாதுகாத்துக் கொள்ளவும் வேண்டியதன் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்வர்.

| **உள்ளடக்கத் தரம்** | **கற்றல் தரம்** | |
|---|---|---|
| | **4+** | **5+** |
| **FK 1.0 மென் இயக்க வளர்ச்சி** | | |
| FK 1.1 பல்வகை மென் இயக்க நடவடிக்கைகளை ஆராய்வர் | **மாணவர்கள்:**<br><br>FK 1.1.1 மென் இயக்கங்களை உள்ளடக்கிய பல்வகை நடவடிக்கைகளை மேற்கொள்வர்<br><br>FK 1.1.2 பல்வகை நடவடிக்கைகள் மூலம் கை மற்றும் கண் ஒருங்கிணைப்பையும் மென் இயக்கத் திறனையும் காட்டுவர் | **மாணவர்கள்:**<br><br>FK 1.1.3 தளவாடங்களைக் கொண்ட நடவடிக்கைகளில் மென் இயக்கத் திறனை மேற்கொள்வர் |
| **FK 2.0 வன் இயக்க வளர்ச்சி** | | |
| FK 2.1 பல்வகை அசைவுகளை ஆராய்வர் (வெளி விழிப்புணர்வு) | **மாணவர்கள்:**<br><br>FK 2.1.1 இயக்கப் பயிற்சிகளைச் செய்வர்:<br>(i) தனி வெளி<br>(ii) பொது வெளி<br><br>FK 2.1.2 பல்வேறு நிலைகளில் இயங்குவர்:<br>(i) உயரமான<br>(ii) நடுத்தரமான<br>(iii) தாழ்வான<br><br>FK 2.1.3 திசைக்கேற்ப நகர்வர் | **மாணவர்கள்:**<br><br>FK 2.1.4 குறிப்பிட்ட வழியில் இயங்குவர்:<br>(i) நேராக<br>(ii) வளைந்து<br>(iii) சுழல் (Spiral)<br>(iv) ஸிக்ஸெக் (zig-zag)<br><br>FK 2.1.5 வெவ்வேறு வேக அளவிற்கேற்ப நகர்வர் |

<table>
<tr><th rowspan="2">உள்ளடக்கத் தரம்</th><th colspan="2">கற்றல் தரம்</th></tr>
<tr><th>4+</th><th>5+</th></tr>
<tr><td>FK 2.2 பல்வகை இடம்பெயர்இயக்கங்ளை வெளிப்படுத்துவர்</td><td>மாணவர்கள்:<br><br>FK 2.2.1 அசைவுகளை மேற்கொள்வர்:<br>(i) நடத்தல்<br>(ii) ஓடுதல்<br>(iii) குதித்தல்<br>(iv) ஒற்றைக் காலில் குதித்தல்<br>(v) குதிரை போல் பாய்தல்<br>(vi) சறுக்குதல்<br>(vii) கயிறடித்தல்<br><br>FK 2.2.2 ஒருங்கிணைந்த இடம்பெயர்இயக்கங்களை மேற்கொள்வர்</td><td>மாணவர்கள்:<br><br>FK 2.2.3 இடம்பெயர்இயக்கங்களைப் பல்வேறு நிலையில் மேற்கொள்வர்:<br>(i) திசை<br>(ii) நிலைகள்<br>(iii) வழி<br>(iv) வேகம்</td></tr>
<tr><td>FK 2.3 பல்வகை இடம்பெயரா இயக்கங்களை வெளிப்படுத்துவர்</td><td>மாணவர்கள்:<br><br>FK 2.3.1 அசைவுகளை மேற்கொள்வர்:<br>(i) வளைத்தல்<br>(ii) ஊசல் (ஊஞ்சல்)<br>(iii) திருப்புதல்<br>(iv) முறுக்குதல்</td><td>மாணவர்கள்:<br><br>FK 2.3.2 அசைவுகளை மேற்கொள்வர்:<br>(i) உடலைத் தளர்த்தல்<br>(ii) தள்ளுதல்<br>(iii) இழுத்தல்<br>(iv) சமநிலைப்படுத்துதல்<br><br>FK 2.3.3 ஒருங்கிணைந்த இடம்பெயரா இயக்கங்களை மேற்கொள்வர்</td></tr>
</table>

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் | |
|---|---|---|
| | 4+ | 5+ |
| **3.0 கையாளும் திறன்** | | |
| FK 3.1 பல்வகை கையாளும் திறனை வெளிப்படுத்துவர் | **மாணவர்கள்:**<br><br>FK 3.1.1 இலக்கை நோக்கிப் பொருளை வீசுவர்<br><br>FK 3.1.2 பந்தை உதைப்பர்:<br>(i) சுதந்திரமாக<br>(ii) குறிப்பிட்ட இலக்கில் | **மாணவர்கள்:**<br><br>FK 3.1.3 பொருளை மேலே எறிந்து பிடிப்பர்<br><br>FK 3.1.4 பிறர் வீசும் பொருளைப் பிடிப்பர்<br><br>FK 3.1.5 இலக்கை நோக்கி உருட்டி விடுவர் |
| **4.0 தாளத்திற்கேற்ற அசைவுகள்** | | |
| FK 4.1 தாளத்திற்கேற்பப் பல்வகை அசைவுகளைப் பயன்படுத்துவர் | **மாணவர்கள்:**<br><br>FK 4.1.1 இசைக்கேற்ப இடம்பெயர் இயக்க அசைவுகளை மேற்கொள்வர்<br><br>FK 4.1.2 இசைக்கேற்ப இடம்பெயரா இயக்க அசைவுகளை மேற்கொள்வர்<br><br>FK 4.1.3 இசைக்கேற்பச் சுதந்திரமாக அசைவுகளை மேற்கொள்வர் | **மாணவர்கள்:**<br><br>FK 4.1.4 இசைக்கேற்பப் பொருள்களைப் பயன்படுத்தி ஆக்ககரமான அசைவுகளை உருவாக்குவர் |

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் | |
|---|---|---|
| | 4+ | 5+ |
| **5.0 உடல்நலம், இனவிருத்தி மற்றும் சமூகவியல் கல்வி (PEERS)** | | |
| FK 5.1 சுய ஆரோக்கியம் இனப்பெருக்கம் போன்றவற்றில் முடிவெடுக்கும் திறனைப் பயன்படுத்துவர் | **மாணவர்கள்:**<br><br>FK 5.1.1 உடல் உறுப்புகளைத் தூய்மையாக வைத்திருக்கும் சரியான முறைகளைக் கூறுவர்<br><br>FK 5.1.2 தூய்மையைப் பேணும் முக்கியத்துவத்தைக் கூறுவர்:<br>(i) தன்<br>(ii) உடை<br>(iii) தனது உடைமைகள்<br><br>FK 5.1.3 ஆண், பெண் உடல் உறுப்புகளை அறிவர்:<br>(i) தலை - முடி, கண், காது, மூக்கு, வாய், உதடு & பல்<br>(ii) உடல் - மார்பகம், நெஞ்சு, தோள்பட்டை, பிட்டம்<br>(iii) கை<br>(iv) கால்<br>(v) பாலுறுப்பு – ஆண்குறி, பெண்குறி<br>(vi) ஆசனவாய் | **மாணவர்கள்:**<br><br>FK 5.1.7 தூய்மையைப் பேணும் முறைகளைக் கடைப்பிடிப்பர்<br>(i) உடல் உறுப்பு<br>(ii) உடை<br>(iii) தன் உடைமை<br><br>FK 5.1.8 பாலுறுப்புகளின் தூய்மையைப் பேணும் சரியான முறைகளை விளக்குவர்<br><br>FK 5.1.9 தூய்மையைப் பேணுவர்:<br>(i) வகுப்பு<br>(ii) வசிப்பிடம்<br>(iii) பொது இடம் |

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் | |
|---|---|---|
| | 4+ | 5+ |
| | FK 5.1.4 பாதுகாப்பான தொடுதல், பாதுகாப்பற்றத் தொடுதல் மற்றும் சங்கடம் ஏற்படுத்தும் தொடுதல் பாதுகாப்பற்ற, சங்கடம்<br><br>FK 5.1.5 ஏற்படுத்தும் தொடுதலுக்கு 'முடியாது' எனச் சொல்லும் திறனை அமல்படுத்துவர்<br><br>FK 5.1.6 கழிவறையை முறையாகப் பயன்படுத்துவர் | |
| FK 5.2 நோய்களின் வகையையும் அதனைத் தடுக்கும் முறையையும் புரிந்து கொள்வர் | **மாணவர்கள்:**<br><br>FK 5.2.1 நோய்கள் பரவுவதைத் தடுக்கும் முறையின் உதாரணங்களைக் காட்டுவர் | **மாணவர்கள்:**<br><br>FK 5.2.2 தீங்குயிரி மூலம் பரவக்கூடிய நோய்களைத் தடுக்கும் தொடக்கக்கட்ட வழிகளைக் கூறுவர் |
| FK 5.3 அன்றாட வாழ்க்கையில் சுய பாதுகாப்பினையும் சமூக உளவியல் திறனைத் திறமையாகக் கையாள்வதையும் செய்து காட்டுவர் | **மாணவர்கள்:**<br><br>FK 5.3.1 ஆபத்தான மூலம், இடம், சூழ்நிலை ஆகியவற்றை விவரிப்பர் | **மாணவர்கள்:**<br><br>FK 5.3.4 ஆபத்தான சூழ்நிலைகளை அடையாளம் காண்பர்:<br>(i) வீடு<br>(ii) பள்ளி<br>(iii) விளையாட்டுப் பூங்கா |

| **உள்ளடக்கத் தரம்** | **கற்றல் தரம்** | |
|---|---|---|
| | **4+** | **5+** |
| | FK 5.3.2 சுய மற்றும் பிறரின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் முறையான நடத்தையைக் கூறுவர்<br><br>FK 5.3.3 அவசரக் காலத்தில் உதவி பெறும் முறையைக் கூறுவர் | FK 5.3.5 ஆபத்தான பொருள்களையும் தளவாடங்களையும் சரியாகவும் பாதுகாப்பாகவும் பயன்படுத்தும் முறையைக் காட்டுவர்<br><br>FK 5.3.6 பாதுகாப்பற்ற சூழ்நிலையை எதிர்நோக்கும் பொழுது அதற்கான தீர்வு காணும் முறையைக் கூறுவர் |
| **6.0 உணவு முறை** | | |
| FK 6.1 ஆரோக்கியமான, பாதுகாப்பான உணவு முறையை அமல்படுத்துவர் | **மாணவர்கள்:**<br><br>FK 6.1.1 ஆரோக்கியமான உணவுகளையும் பானங்களையும் அடையாளம் காண்பர்<br><br>FK 6.1.2 ஆரோக்கியமான உணவை உண்பதன் முக்கியத்துவத்தைக் கூறுவர் | **மாணவர்கள்:**<br><br>FK 6.1.3 சத்துள்ள, சத்தற்ற உணவுகளைக் கூறுவர்<br><br>FK 6.1.4 சமச்சீர் உணவு முறையை அமல்படுத்துவர் |

# சொற்களஞ்சியம்

| எண் | சொல் | பொருள் |
|---|---|---|
| 1. | இடம்பெயரா இயக்கம் | ஒரே இடத்தில் நின்றபடி குனிந்து, நிமிர்ந்து இயக்கத் திறன்களை மேற்கொள்ளல். உதாரணம்: குனிதல், பாய்தல், சமநிலைப்படுத்துதல், அசைதல், நீட்டித்தல், சுழலுதல், இழுத்தல், தள்ளுதல். |
| 2. | கையாளும் திறன் | எறிதல், பிடித்தல், உருட்டுதல், உதைத்தல் போன்ற திறன்களின் மூலம் ஒரு பொருளை அனுப்பவும் பெறவும் தேவைப்படும் ஆற்றல். |
| 3. | மென் இயக்கத் திறன் | கையிலுள்ள சிறு தசைகள், மணிக்கட்டு, விரல்கள் போன்றவற்றையும் கை மற்றும் கண் ஒருங்கிணைப்புத் திறனையும் பயன்படுத்தும் ஆற்றல். இது எழுதவும், விரல்களால் சிறிய பொருள்களைப் பிடிக்கவும் கசக்கவும் சட்டைப் பொத்தான்களைப் பொருத்தவும் காலணி கயிறுகளைக் கட்டவும் இன்னும் பலவற்றையும் செய்யக் கூடிய ஆற்றல். |
| 4. | வன் இயக்கத் திறன் | நடத்தல், ஓடுதல், குதித்தல் போன்ற இயக்கங்களை உடலிலுள்ள பெரிய தசைகளைப் பயன்படுத்தி நகர்தல். |
| 5. | வெளி விழிப்புணர்வு | நகருதலின் போது பயன்படுத்தப்படும் வெளி. |
| 6. | இடம்பெயர் இயக்கம் | இடம்பெயர் இயக்கம் ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்திற்கு இடம்பெயரப் பயன்படுகிறது. உதாரணம்: நடத்தல், ஓடுதல், குதித்தல், ஒற்றைக் காலில் குதித்தல், பாய்தல், சறுக்குதல், கயிற்றடித்தல். |
| 7. | உடல்நலம், இனவிருத்தி மற்றும் சமுகவியல் கல்வி (PEERS) | வாழ்க்கைக்குத் தேவையான உயிரியல், சமூகவியல், உளவியல், ஆன்மிகம் ஆகியவற்றைப் பற்றிய அறிவைப் பெற்று ஆரோக்கியமான நடத்தைகளை அமல்படுத்தும் கல்வி. |
| 8. | தீங்குயிரிகளால் பரவும் நோய்கள் | மனிதன், விலங்கு அல்லது நுண்ணுயிர் போன்றவை நோய்க் கிருமிகளைப் பிற உயிர்களுக்குச் செலுத்துவதால் உண்டாகும் நோய்கள். |

| எண் | சொல் | பொருள் |
|---|---|---|
| 9. | இசைக்கேற்ற அசைவு | இடம்பெயர், இடம்பெயரா இயக்கத்திறனைப் பயன்படுத்தி இசைக்கேற்ப இயங்க வலியுறுத்துதல். |
| 10. | திசை நோக்கிய நகர்ச்சி | முன்னோக்கி, பின்னோக்கி, இடப்பக்கமாக, வலப்பக்கமாக, மேலே, கீழே நகர்தல். |
| 11. | பல்வகை நிலைக்கேற்ற இயக்கம் | உயரமான, நடுத்தரமான, தாழ்வான இடத்திலிருந்து நகர்தல். |
| 12. | பொது வெளி | A-யிலிருந்து B-விற்கு இடம்பெயர பயன்படுத்தப்படும் வெளி. |
| 13. | தன் வெளி | தான் இருக்கும் இடத்திலிருந்து எட்டும் தூரத்திற்குள்ள வெளி. |
| 14. | பாதுகாப்பான தொடுதல் | ஒருவரைப் பாராட்டுவதாக, நேசிப்பதாக, மதிப்பதாக உணர வைக்கும் தொடுதல். |
| 15. | பாதுகாப்பற்ற தொடுதல் | ஒருவரின் உணர்வை வேதனைப்படுத்தும் தொடுதல். |
| 16. | சங்கடம் ஏற்படுத்தும் தொடுதல் | அறிமுகமானவரின் அல்லது அறிமுகமற்றவரின் தொடுதல், பாதுகாப்பான தொடுதலாக இருந்தாலும் விரும்பத் தகாத தொடுதலாகும். |

# ஆக்கமும் முருகுணர்ச்சியும்

ஆக்கமும் முருகுணர்ச்சியும் இசை, நாடகம், காட்சிக்கலை ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.

1. இசை

பாலர்பள்ளியில் இசைக் கல்விக்கு இசை, நடனம், நாடகம் ஆகியவை அடிப்படையாகும். இதனை ஆக்கமிக்க, மகிழ்ச்சியூட்டும், உற்சாகப்படுத்தும் பலவகையான நடவடிக்கைகள் மூலம் வளர்க்கலாம். மாணவர்கள் தங்களின் வளர்ச்சிக்கேற்ப இசையுலகில் தங்களது திறமையையும் ஆர்வத்தையும் வெளிக்கொணர வாய்ப்பு வழங்கப்படும்.

2. நாடகம்

பாலர்பள்ளியில் நாடகமானது செயல், இடம் மற்றும் நேரத்திற்கேற்ப ஒருவரைப் பின்பற்றி நடப்பதாகும். மாணவர்கள் கதைக்கேற்பவும் தங்களின் கற்பனைக்கேற்பவும் பாத்திரமேற்று நடித்தல்வழி தங்களது உள உணர்வுகளை வெளிப்படுத்த வாய்ப்பு வழங்கப்படும்.

3. காட்சிக்கலை

ஆக்கப் படைப்புகளை உருவாக்குதலையும் கலைப்படைப்பை நலம் பாராட்டுதலையும் வலியுறுத்துவது பாலர்பள்ளியின் காட்சிக்கலையாகும். வரைதல், கோலங்கள் உருவாக்குதல், வடிவமைத்து உருவாக்குதல் மற்றும் பாரம்பரிய கைவினைப் பொருள்களை அறிதல் ஆகிய நான்கு துறைகளை அடிப்படையாகக் கொண்டது. இந்த நான்கு துறைகளின் ஒருங்கிணைப்பு மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்ட, ஆளுமையை வளர்க்க, கலைப்பண்புகளையும் சுற்றுச் சூழலையும் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த வாய்ப்பாக அமையும்.

ஆக்கமும் முருகுணர்ச்சியும் கற்றல் நடவடிக்கைக்குப் பின் மாணவர்கள்:

(i) பல்வகை இசைகளை உய்த்துணர்வர்.

(ii) கேட்கப்படும் இசைக்கேற்ப அசைவுகள் மேற்கொள்வர்.

(iii) கதைக்கேற்பப் பல்வகை பாத்திரமேற்று நடிப்பர்.

(iv) அறிவைப் பயன்படுத்திக் கலைப்படைப்புகளை உருவாக்குவர்.

(v) பல்வேறு உத்திகளையும் பொருள்களையும் பயன்படுத்தி ஆக்கமிக்க கலைப்படைப்பை உருவாக்குவர்.

(vi) தன்னுடைய படைப்புகளுக்கும் பிறரின் படைப்புகளுக்கும் மதிப்பளிப்பர்.

பாலர்பள்ளிக்கான ஆக்கமும் முருகுணர்ச்சியும் கற்றல் கற்பித்தலில் மாணவர்கள் கலை, இசை, நாடகம் ஆகிய நடவடிக்கைகளில் துலங்க வாய்ப்பளிக்கிறது. தங்களையும் தங்களைச் சுற்றியும் உள்ள உலகைப் பற்றிய உள்ளுணர்வை இசை, கலை வழியாகவும் ஆக்கத்தோடும் கற்பனையோடும் வெளிக்கொணர மாணவர்களை ஊக்கப்படுத்த வேண்டும். மாணவர்கள் இயற்கையான முறையில் கற்பனையாற்றலையும் ஆக்கத்திறனையும் வளர்த்திட பல்வேறு பொருள்களையும் உத்திகளையும் பயன்படுத்திக் கலை, இசை, நாடகம் ஆகிய நடவடிக்கைகள் மூலம் ஆராய்ந்திட வாய்ப்பளிக்கிறது. அதோடு, மாணவர்கள் கலை, இசை, நாடகம் ஆகியவற்றையொட்டிய தங்களின் ஏடல்களையும் கருத்துகளையும் உணர்வையும் கூறவும், நலம் பாராட்டவும் வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும்.

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் | |
|---|---|---|
| | 4+ | 5+ |
| **KE 1.0 இசை** | | |
| KE 1.1 பல்வேறு இசைத் தொகுதிகளைக் கொண்டு பாடலைப் பாடுவர் | **மாணவர்கள்:**<br><br>KE 1.1.1 மனிதர்களின் பல்வேறு தொனிகளைப் போல:<br>(i) பேசுவர்<br>(ii) அழைப்பர்<br>(iii) கிசுகிசுப்பர்<br>(iv) பாடுவர்<br>(v) ஆண், பெண்<br><br>KE 1.1.2 சுற்றுச்சூழலில் உள்ள பல்வேறு ஒலிகளைப் பின்பற்றி ஒலிப்பர்<br><br>KE 1.1.3 ராகத்தோடு பாடலைப் பாடுவர் | **மாணவர்கள்:**<br><br>KE 1.1.4 பாடலைப் பாடுவர்:<br>(i) தெளிவான மற்றும் சரியான உச்சரிப்புடன்<br>(ii) சரியான சுருதியுடன் |

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் | |
|---|---|---|
| | 4+ | 5+ |
| KE 1.2 தாளக்கருவிகளை இசைப்பர் | **மாணவர்கள்:**<br><br>KE 1.2.1 உடல்பாகங்களைப் பயன்படுத்தி ஒலிகளை எழுப்புவர்<br><br>KE 1.2.2 தாளக்கருவிகளை ஆராய்வர் | **மாணவர்கள்:**<br><br>KE 1.2.3 மேம்படுத்தப்பட்ட இசைக்கருவிகளைப் பயன்படுத்தி ஆக்கத்தோடு பல்வேறு ஒலிகளை உருவாக்குவர் |
| KE 1.3 இசைக்கேற்ப அசைவுகள் மேற்கொள்வர் | **மாணவர்கள்:**<br><br>KE 1.3.1 பாடல் வரிகளுக்கேற்ப அசைவுகளை மேற்கொள்வர்<br><br>KE 1.3.2 மெட்டுக்கேற்ப அசைவுகளை மேற்கொள்வர் | **மாணவர்கள்:**<br><br>KE 1.3.3 இசைக்கேற்ப ஆக்ககரமான அசைவுகளை மேற்கொள்வர் |
| KE 1.4 பல்வேறு இசைத் தொகுதிகளை உய்த்துணர்வர் | **மாணவர்கள்:**<br><br>KE 1.4.1 செவிமடுத்த இசைக்கேற்பப் பாவனை செய்வர் | **மாணவர்கள்:**<br><br>KE 1.4.2 செவிமடுத்த இசையைத் தாளத்திற்கேற்ப வேறுபடுத்துவர்<br><br>KE 1.4.3 செவிமடுத்த இசையில் உள்ள உரக்க மற்றும்<br>மென்மையான கூறுகளை வேறுபடுத்துவர் |

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் | |
|---|---|---|
| | 4+ | 5+ |
| **KE 2.0 நாடகம்** | | |
| KE 2.1 பல்வேறு பாத்திரமேற்று நடிப்பர் | **மாணவர்கள்:**<br><br>KE 2.1.1 கற்பனை வளத்துடன் பாத்திரமேற்று நடிப்பர் | **மாணவர்கள்:**<br><br>KE 2.1.2 கதைக்கேற்பப் பாத்திரமேற்று நடிப்பர் |
| **KE 3.0 காட்சிக்கலை** | | |
| KE 3.1 கலைக் கூறுகளை அறிவர் (கலை மீதான கண்ணோட்டம்) | **மாணவர்கள்:**<br><br>KE 3.1.1 சுற்றி உள்ள கலைக் கூறுகளைக் கூறுவர் | **மாணவர்கள்:**<br><br>KE 3.1.2 மனித படைப்புகளில் உள்ள கலைக் கூறுகளைக் கூறுவர்<br><br>KE 3.1.3 கலைப் படைப்புகளில் உள்ள கலைக் கூறுகளைக் கூறுவர் |
| KE 3.2 கலைப் படைப்புகளை உருவாக்கும் உபகரணங்களைத் தெரிந்து கொள்வர் (கலை பயன்பாடு) | **மாணவர்கள்:**<br><br>KE 3.2.1 கலைப் படைப்புகளை உருவாக்கும் பல்வேறு உபகரணங்களைக் கூறுவர் | **மாணவர்கள்:**<br><br>KE 3.2.2 கலைப் படைப்பு உருவாக்கத்தில் பொருத்தமான உபகரணங்களைத் தெரிவு செய்வர் |

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் 4+ | கற்றல் தரம் 5+ |
|---|---|---|
| KE 3.3 ஆக்கப்பூர்வமான ஏடல்களைப் படைப்பாக்கத்தில் வெளிப்படுத்துவர் (ஆக்கப்பூர்வமான வெளிப்பாடு) | **மாணவர்கள்:**<br><br>KE 3.3.1 உபகரணங்களை ஆராய்வர்<br><br>KE 3.3.2 வரைதல் நடவடிக்கைமூலம் ஆக்கப்பூர்வமான கலைப் படைப்பாற்றலை உருவாக்குவர் | **மாணவர்கள்:**<br><br>KE 3.3.3 கோலங்களையும் வடிவங்களையும் ஆக்கத்தோடு சுயமாகப் படைப்பர்<br><br>KE 3.3.4 ஆக்கப்பூர்வமான மாதிரியை உருவாக்குவர்<br><br>KE 3.3.5 பல்வகைப்பொருள்களைப் பயன்படுத்திப் பாரம்பரிய கைவினைப் பொருள்களை உருவாக்குவர்<br><br>KE 3.3.6 மறுசுழற்சிப் பொருள்களைப் பயன்படுத்தி ஆக்கத்தோடு கலைப் படைப்பை உருவாக்குவர் |
| KE 3.4 கலைப் படைப்பைப் பாராட்டுவர் (கலையை மதித்துப் போற்றுதல்) | **மாணவர்கள்:**<br><br>KE 3.4.1 தாம் உருவாக்கிய கலைப் படைப்பைக் கூறுவர் | **மாணவர்கள்:**<br><br>KE 3.4.2 மற்றவர்களின் கலைப் படைப்பைப் பாராட்டுவர் |

## சொற்களஞ்சியம்

| எண் | சொல் | பொருள் |
|---|---|---|
| 1. | மேம்படுத்தப்பட்ட இசைக்கருவிகள் | இசைக் கருவிகளுக்கு மாற்றாக வேறுபொருள்களைப் பயன்படுத்தி ஒலியை உருவாக்குதல். |
| 2. | மாதிரி உருவாக்கம் | ஒரு பொருளைப் போன்று இன்னொன்றை உருவாக்குதல். |
| 3. | ஒலி மாற்றம் | உருவாக்கும் ஒலி உரக்க அல்லது மென்மையாக இருத்தல். |
| 4. | பாரம்பரிய கைவினை | இத்துறை பரம்பரைத் தொழிலாகப் பின்பற்றப்படும் மக்களால் கைவினைத் திறனைப் பயன்படுத்தும் படைப்பாற்றலைச் சார்ந்தது. |
| 5. | உபகரணம் | கலைப்படைப்பை உருவாக்கப் பயன்படுத்தப்படும் பொருள்கள். |
| 6. | மெட்டு | வரிசைக்கிரமமான ஒலி நிரல். (ஏற்றம், இறக்கம், நடுநிலை) |
| 7. | வடிவமைத்தலும் உருவாக்குதலும் | வடிவம், வெளி, கட்டமைப்பு, சமநிலை, நிலைத்தன்மை ஆகிய கலை அம்சங்கள் மாணவர்களின் அனுமானிக்கும் வளர்ச்சியை வலியுறுத்துகிறது. |
| 8. | கோலங்களை உருவாக்குதல் | கலைத் தொடர்பான படைப்புகளை உருவாக்குவதற்கு அடிப்படையாகும். கோலங்களும் உருவாக்கமும் இன்றி எக்காலத்திலும் நல்ல கலைப்படைப்பை உருவாக்க முடியாது. |
| 9. | வரைதல் | அனுமானம், திறன், ஆற்றல் ஆகியவை மாணவர்களின் வளர்ச்சியை வலியுறுத்துவதோடு வரையும் அம்சங்களைக் கொண்டு பல உபகரணங்களையும் உத்திகளையும் பயன்படுத்துவதாகும். மேலும் வெளி, கட்டமைப்பு, சமநிலை, கலவை ஆகியவற்றையும் உள்ளடக்கியதாகும். |

| எண் | சொல் | பொருள் |
|---|---|---|
| 10. | தாளக்கருவிகள் | ஊதுதல், தட்டுதல், குலுக்குதல் மூலம் ஒலியெழுப்பும் இசைக்கருவிகள். உதாரணமாக, கொம்பாங், தாளக் கிலுவை, முக்கோண மணி, தம்போரிம். |
| 11. | சுருதி | ஏற்றம், இறக்கம், நடுநிலையான ஒலி. |
| 12. | தொகுதி | பாடல் தொகுப்பு |
| 13. | உருவம் | கோடுகளாலான உருவம். இது சமச்சீர் அமைவு அல்லது சமச்சீர் அமைவற்றது என இருவகையாக உள்ளது. |
| 14. | தாள அளவு | ஒரு இசைப் படைப்பின் வேகம். உதாரணமாக விரைவான அல்லது மெதுவான தாளம். |
| 15. | தொனி | பல்வேறு வகையான ஒலிகளின் உருவாக்கம். |
| 16. | கலைக் கூறுகள் | கோடு, வண்ணம், உருவம், வடிவம், ஒன்றின் மேல்பரப்பு, இடைவெளி ஆகியவை உள்ளடங்கியது. |

# அறிவியல் தொழில்நுட்ப உத்திரம்

# ஆரம்ப அறிவியல்

ஆரம்ப அறிவியல் வாழ்வியல், பொறியியல், இயற்பியல் உலகத்தை ஆராய்வதன் மூலம் அறிவியல் செயற்பாங்கு திறனை ஆளுமை பெறுவதோடு நடத்தை உருவாக்கத்தை வலியுறுத்துகிறது.

ஆரம்ப அறிவியலை அடிப்படையாகக் கொண்ட கற்றல் நடவடிக்கைக்குப் பின் மாணவர்கள்:

1. ஆர்வ மனப்பான்மையும் தங்களைச் சுற்றியுள்ள உலகை அறியும் நாட்டத்தையும் வளர்த்துக் கொள்வர்.
2. அறிவியல் செயற்பாங்கு திறனையும் ஆக்கம் மற்றும் ஆய்வுச் சிந்தனையையும் கைவரப்பெறுவர்.
3. அறிவியல் செயற்பாங்கு மற்றும் நன்னெறிப் பண்புகளை அமல்படுத்துவர்.
4. சிக்கல் களைதல், தகவல் பரிமாற்றம் மற்றும் தொடர்பு கொள்ள முடியும்.

அறிவியல் செயற்பாங்கு திறன் என்பது சிக்கல்களுக்குத் தீர்வு காணும் முறை அல்லது முறைமையாக தீர்வு காணும் திறனைப் பெற்றிருத்தலேயாகும். இத்திறன் மன செயற்பாங்கின் வழி ஆக்கச்சிந்தனை, பகுப்பாய்வு, முறைமை ஆகியவற்றை ஊக்கப்படுத்துகிறது. அறிவியல் செயற்பாங்கு திறனில் அடையாளம் காணப்பட்ட உற்றறிதல், வகைப்படுத்துதல், அளவெடுத்தல், ஊகித்தல், அனுமானம் செய்தல், தொடர்பு கொள்ளுதல் போன்றவை வளர்க்கப்பட வேண்டும்.

அ) உற்றறிதல் என்பது பார்த்தல், கேட்டல், தொடுதல், நுகர்தல், சுவைத்தல் ஆகிய ஐம்புலன்களைப் பயன்படுத்தி ஒரு பொருள் அல்லது நிகழ்வைப் பற்றி கருத்துகளைச் சேகரித்தல்.

ஆ) வகைப்படுத்துதல் என்பது உற்றறிதலின் மூலம் ஒற்றுமை, வேற்றுமை அடிப்படையில் பொருள்களை அல்லது நிகழ்வை வகைப்படுத்துதல்.

இ) அளவெடுத்தல் என்பது தரத்திற்கு உட்படாத அளவையைப் பயன்படுத்தி எண்ணிக்கையைச் சார்ந்த உற்றறிதல் ஆகும். தரத்திற்கு

உட்படாத அளவைக்கான (அளவுகள்) எடுத்துக்காட்டுகள்:

i. உடற்பகுதிகள் - சாண், பாதம், ஆழம், ஒரு பிடி

ii. பொருள் - பேனா, காகிதச் செருகி, துடைப்பக் குச்சி, கரண்டி மற்றும் குவளை

ஈ) ஊகித்தல் என்பது கிடைக்கப்பெற்ற தகவல்கள் மற்றும் முன் அனுபவத்தைக் கொண்டு முடிவெடுத்தலும் ஒரு நிகழ்வை விளக்குதலும்.

உ) அனுமானம் செய்தல் என்பது உற்று நோக்குதல், முன் அனுபவம் அல்லது நம்பகத்தன்மை கொண்ட தரவுகள் அடிப்படையில் எடுக்கப்படும் முடிவே அனுமானித்தலாகும்.

ஊ) தொடர்பு கொள்ளுதல் என்பது ஒரு நடவடிக்கை, பொருள் அல்லது நிகழ்வை விளக்க சொற்கள், அட்டவணை, குறிவரைவு, பட உருவம், வடிவுரு போன்ற வரையுரு குறியீடுகளைப் பயன்படுத்துதல்.

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் | |
|---|---|---|
| | 4+ | 5+ |
| **SA 1.0 அறிவியல் செயற்பாங்கு** | | |
| SA 1.1 அறிவியல் செயற்பாங்கு, நன்னெறிப் பண்புகளை வெளிப்படுத்துவர் | **மாணவர்கள்:**<br><br>SA 1.1.1 ஆர்வத்தையும் ஒத்துழைப்பையும் வெளிப்படுத்துவர் | **மாணவர்கள்:**<br><br>SA 1.1.2 தெரிந்து கொள்ளும் ஆர்வம், முறைமை, ஒத்துழைப்பு, பொறுப்புணர்ச்சி ஆகியவற்றை வெளிப்படுத்துவர் |

<table>
<tr><th rowspan="2">உள்ளடக்கத் தரம்</th><th colspan="2">கற்றல் தரம்</th></tr>
<tr><th>4+</th><th>5+</th></tr>
<tr><td colspan="3">SA 2.0 அறிவியல் செயற்பாங்குத் திறன்</td></tr>
<tr><td>SA 2.1 ஐம்புலன்களைப் பயன்படுத்தி உற்றறிவர்</td><td>மாணவர்கள்:<br>SA 2.1.1 புலன்களைப் பயன்படுத்திச் சுற்றுப்புறத்தை உற்றறிவர்:<br>(i) பார்த்தல்<br>(ii) கேட்டல்<br>(iii) தொடுதல்<br>(iv) நுகர்தல்<br>(v) சுவைத்தல்</td><td>மாணவர்கள்:<br>SA 2.1.2 இருபுலன்களைக் கொண்டு சுற்றுப்புறத்தை உற்றறிவர்<br>SA 2.1.3 மூன்று அல்லது அதற்கும் மேற்பட்ட புலன்களைக் கொண்டு சுற்றுபுறத்தை உற்றறிவர்</td></tr>
<tr><td>SA 2.2 பொருள்களை வகைப்படுத்துவர்</td><td>மாணவர்கள்:<br>SA 2.2.1 ஒரு தன்மையைக் கொண்டு பொருள்களை ஒப்பிடுவர்; வேறுபடுத்துவர்<br>(i) வண்ணம்<br>(ii) வடிவம்<br>(iii) உருவளவு<br>(iv) இழையமைப்பு<br>(v) எடை</td><td>மாணவர்கள்:<br>SA 2.2.2 ஒரே மாதிரியான இரு தன்மைகளைக் கொண்ட பொருள்களை ஒப்பிடுவர்; வேறுபடுத்துவர்<br>SA 2.2.3 அடையாளம் காணப்பட்ட தன்மைக்கேற்பப் பொருள்களைச் சேகரிப்பர்<br>SA 2.2.4 வகைப்படுத்தப்பட்ட பொருளின் பொதுவான தன்மையைக் கூறுவர்</td></tr>
</table>

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் | |
|---|---|---|
| | 4+ | 5+ |
| SA 2.3 அளவெடுப்பர் | **மாணவர்கள்:**<br><br>SA 2.3.1 பொருளின் அளவை ஒப்பிடுவர்:<br>(i) நீளம் - குட்டை<br>(ii) தடித்த - மெலிந்த<br>(iii) பெரியது - சிறியது<br>(iv) உயரம் - குட்டை<br>(v) கனம் - இலகு<br><br>SA 2.3.2 ஒரு தரத்திற்கு உட்படாத அளவையைப் பயன்படுத்தி பொருளின் நீளத்தையும் உயரத்தையும் அளவெடுப்பர் | **மாணவர்கள்:**<br><br>SA 2.3.3 இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்ட தரத்திற்கு உட்படாத அளவையைப் பயன்படுத்திப் பொருளின் நீளத்தையும் உயரத்தையும் அளவெடுப்பர்<br><br>SA 2.3.4 தரத்திற்கு உட்படாத அளவையைப் பயன்படுத்திப் பொருள்களை நிறுப்பர்<br><br>SA 2.3.5 தரத்திற்கு உட்படதா அளவையைப் பயன்படுத்தி நீர்மத்தை அளவெடுப்பர் |
| SA 2.4 ஊகிப்பர் | **மாணவர்கள்:**<br><br>SA 2.4.1 உற்றறிதலின் வழி எளிமையாகவும் நியாயமாவும் ஊகிப்பர் | **மாணவர்கள்:**<br><br>SA 2.4.2 உற்றறிதலின் வழி நியாயமாக ஊகிப்பர் |
| SA 2.5 ஆருடம் கூறுவர் | **மாணவர்கள்:**<br><br>SA 2.5.1 முன் அனுபவத்தைக் கொண்டு சூழலுக்கேற்ப ஆருடம் கூறுவர் | **மாணவர்கள்:**<br><br>SA 2.5.2 செய்த நடவடிக்கையின் வழி தொடர்ந்து நடைபெறவிருப்பதை ஆருடம் கூறுவர் |

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் | |
|---|---|---|
| | 4+ | 5+ |
| SA 2.6 தொடர்பு கொள்வர் | **மாணவர்கள்:**<br><br>SA 2.6.1 உற்றறிந்தவற்றைப் படைப்பு அல்லது வாய்மொழியாகக் கூறுவர் | **மாணவர்கள்:**<br><br>SA 2.6.2 உற்றறிந்தவற்றைப் படைப்பு அல்லது வாய்மொழியாக விவரிப்பர்<br><br>SA 2.6.3 உற்றறிந்தவற்றைப் படைப்பு அல்லது வாய்மொழியாக முடிவெடுப்பர் |
| **SA 3.0 வாழ்வியல் செயற்பாங்கு** | | |
| SA 3.1 உயிருள்ள, உயிரற்ற பொருள்களை அடையாளம் காண்பர் | **மாணவர்கள்:**<br><br>SA 3.1.1 உயிருள்ள, உயிரற்ற பொருள்களை வேறுபடுத்துவர் | **மாணவர்கள்:**<br><br>SA 3.1.2 உயிருள்ள, உயிரற்ற பொருள்களின் தன்மைகளை அடையாளம் காண்பர் |
| SA 3.2 உடல்பாகம், புலன் ஆகியவற்றின் அடிப்படை அறிவைப் பெறுவர் | **மாணவர்கள்:**<br><br>SA 3.2.1 உடல் உறுப்புகளை அடையாளம் காண்பர் | **மாணவர்கள்:**<br><br>SA 3.2.2 உடல் உறுப்புகளின் பயன்பாட்டினைக் கூறுவர்<br><br>SA 3.2.3 ஒவ்வொரு புலன்களின் பயன்பாட்டினை அடையாளங்கண்டு கூறுவர் |

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் | |
|---|---|---|
| | 4+ | 5+ |
| SA 3.3 பிராணிகளை ஆய்வு செய்வர் | **மாணவர்கள்:**<br><br>SA 3.3.1 பிராணிகளைப் பெயரிடுவர்<br><br>SA 3.3.2 பிராணிகளின் உடல் பாகங்களைப் பெயரிடுவர்<br><br>SA 3.3.3 பிராணிகளின் ஒலிகளை அடையாளம் காண்பர்<br><br>SA 3.3.4 பிராணிகளின் அசைவுகளை உற்றறிந்து போலித்தம் செய்வர் | **மாணவர்கள்:**<br><br>SA 3.3.5 பிராணிகளின் வசிப்பிடத்தை அடையாளம் காண்பர்<br><br>SA 3.3.6 பிராணிகளின் முதன்மை உணவைக் கொண்டு ஒப்பிடுவர்; வேறுபடுத்துவர்:<br><br>(i) மாமிசங்களை உண்ணும் பிராணிகள்<br>(ii) தாவரங்களை உண்ணும் பிராணிகள்<br>(iii) மாமிசங்களையும் தாவரங்களையும் உண்ணும் பிராணிகள்<br><br>SA 3.3.7 பிராணிகளின் வாழ்க்கைச் சுழற்சியைப் பற்றி உற்றறிந்து கூறுவர் |

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் | |
|---|---|---|
| | 4+ | 5+ |
| SA 3.4 தாவரங்களை ஆய்வு செய்வர் | **மாணவர்கள்:**<br><br>SA 3.4.1 தாவரங்களின் பாகங்களை அடையாளம் காண்பர்:<br>(i) இலை<br>(ii) தண்டு<br>(iii) வேர்<br>(iv) பூ<br>(V) பழம்<br><br>SA 3.4.2 பின்வரும் தன்மைகளைக் கொண்டு தாவரங்களின் பாகங்களை ஒப்பிடுவர்:<br>(i) வண்ணம்<br>(ii) உருவளவு<br>(iii) வடிவம்<br><br>SA 3.4.3 பயன்பாட்டில் காணப்படும் காய்கறி மற்றும் பழங்களை உற்றறிந்து பெயரிடுவர்<br><br>SA 3.4.4 தாவரங்கள் உயிர்வாழ தேவையானவற்றை உற்றறிந்து கூறுவர் | **மாணவர்கள்:**<br><br>SA 3.4.5 பின்வரும் தன்மைகளின் அடிப்படையில் தாவரங்களின் பாகங்களை உற்றறிந்து சேகரிப்பர்:<br>(i) வண்ணம்<br>(ii) உருவளவு<br>(iii) வடிவம்<br>(iv) இழையமைப்பு<br><br>SA 3.4.6 குறிப்பிட்ட தன்மைக்கேற்பத் தாவரங்களை வகைப்படுத்துவர்<br><br>SA 3.4.7 விதை முளையிட்டு வளரும் செயற்பாங்கினை உற்றறிந்து குறிப்பெடுப்பர் |

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் | |
|---|---|---|
| | 4+ | 5+ |
| **SA 4.0 பொருளியல் செயற்பாங்கு** | | |
| SA 4.1 பொருளின் தன்மையை ஆராய்வர் | **மாணவர்கள்:**<br><br>SA 4.1.1 மிதக்கும் மூழ்கும் பொருள்களை ஆராய்வர் | **மாணவர்கள்:**<br><br>SA 4.1.2 நீர் மாற்றத்தின் செயற்பாங்கினை விவரிப்பர்:<br>(i) நீரிலிருந்து பனிக்கட்டியாகவும் பனிக்கட்டியிலிருந்து நீராகவும்<br>(ii) நீரிலிருந்து நீராவியாக நீராவியிலிருந்து நீராகவும்<br><br>SA 4.1.3 நீரில் கரையும் பொருள்களை ஆராய்வர்<br><br>SA 4.1.4 நீரை ஈர்க்கும் பொருள்களை ஆராய்வர்<br><br>SA 4.1.5 பல்வேறு பொருள்களின் மீது காந்தத்தின் தன்மையை ஆராய்வர் |
| **SA 5.0 இயற்பியல் செயற்பாங்கு** | | |
| SA 5.1 அன்றாட வாழ்வின் இயற்பியல் செயற்பாங்கினை ஆராய்வர் | **மாணவர்கள்:**<br><br>SA 5.1.1 ஒளியின் பல்வகை மூலத்தைக் கூறுவர்<br><br>SA 5.1.2 நிழலை உற்றறிந்து பதிவு செய்வர் | **மாணவர்கள்:**<br><br>SA 5.1.3 அன்றாட வாழ்க்கையில் சூரிய ஒளியின் பயன்பாட்டினை ஆராய்வர்<br><br>SA 5.1.4 வேறுபட்ட வானிலையை உற்றறிவர்; கூறுவர் |

# ஆரம்பக் கணிதம்

ஆரம்பக் கணிதம் பாலர்பள்ளி மாணவர்களுக்கு அடிப்படை எண்களின் அறிமுகம், எண் கருத்துரு, எண்களின் விதி, நாணய மதிப்பு, நேரமும் காலமும், வடிவமும் இடப்பரப்பும் ஆகியவற்றின் அனுபவத்தை வழங்குகின்றது.

ஆரம்பக் கணிதத்தை அடிப்படையாகக் கொண்ட கற்றல் நடவடிக்கைக்குப் பின் மாணவர்கள்:

1. கணிதப் பாடத்தின் வழி பல்வகை நடவடிக்கைகளும் அன்றாட அனுபவமும் ஈர்ப்பை ஏற்படுத்த முடியும்.
2. அடிப்படை கணிதக் கருத்துருவைக் கைவரப்பெற்றிருக்க முடியும்.
3. சிக்கல் களைதல் மற்றும் சிந்தனைத் திறனை மேம்படுத்த முடியும்.

பாலர்பள்ளி கல்வியில் அடிப்படை எண்களின் அறிமுக கருத்துரு சில பிரிவுகளாக உள்ளது.

1. இனம் சேர்ந்த பொருளையும் இனம் சேரா பொருளையும் அடையாளம் கண்டு இணைப்பர். எடுத்துக்காட்டு:

   (அ) இனம் சேர்ந்த பொருளை இணைப்பர். உதாரணம்: காலணி

   (ஆ) இனம் சேரா பொருளை இணைப்பர். உதாரணம்: கரண்டி, முட்கரண்டி

   (இ) பொருளின் எண்ணிக்கைக்கேற்ப எண் குறியீட்டை இணைப்பர்.

2. ஒப்பீடு என்பது இரு வேறு பொருள்களின் அடிப்படை ஒப்பீட்டு அம்சங்களைக் கொண்டு தொடர்புபடுத்தும் ஒரு செயற்பாங்கு. உதாரணத்திற்கு, அளவு (நீளம் - குட்டை), உருவளவு (பெரிது - சிறிது), எடை (கனம் - இலகு), எண்ணிக்கை (அதிகம் - குறைவு).
3. ஒரு தன்மையின் அடிப்படையில் வகைப்படுத்துதல் என்பது இரண்டிற்கும் மேற்பட்ட பொருள்களைத் தெளிவான விளக்கத்திற்கு ஏற்றவாறு வரிசைப்படுத்துவதாகும்.

4. நிரல்படுத்தப்பட்ட பொருள் அல்லது எண் தொடரில் உள்ள குறிப்பிட்ட கோலங்களைத் தோரணி என்பர்.

5. நிலைத்தன்மை என்பது பொருண்மை, கொள்ளளவு, பரப்பளவு ஆகியவற்றோடு தொடர்புள்ளவை. நிலைத்தன்மை கருத்துரு அறிமுகப்படுத்தியதன் நோக்கம் மாணவர்கள் பொருண்மை மற்றும் கொள்ளளவின் நிலைத்தன்மையைப் புரிந்து கொண்டு மாறுபட்ட இடம் அல்லது சூழலில் வரிசைப்படுத்துவதை உறுதிப்படுத்துவர்.

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் | |
|---|---|---|
| | 4+ | 5+ |
| **MA 1.0 அடிப்படை எண்களின் அறிமுகம்** | | |
| MA 1.1 பொருளை இணைப்பர் | **மாணவர்கள்:**<br>MA 1.1.1 இனம் சேர்ந்தவற்றை இணைப்பர்<br>MA 1.1.2 இனம் சேராதவற்றை இணைப்பர்<br>MA 1.1.3 சமமான இரு குவியலில் உள்ள பொருள்களை இணைப்பர் | **மாணவர்கள்:**<br>MA 1.1.4 பொருள்களை இணைப்பர்:<br>(i) வண்ணம்<br>(ii) வடிவம்<br>(iii) உருவளவு |
| MA 1.2 பொருள்களின் எண்ணிக்கையை ஒப்பிடுவர் | **மாணவர்கள்:**<br>MA 1.2.1 இரு குழுவில் உள்ள பொருள்களை ஒப்பிட்டுக் கூறுவர்<br>(i) அதிகம் அல்லது குறைவு<br>(ii) சமமான எண்ணிக்கை அல்லது வேறுபட்ட எண்ணிக்கை<br>(iii) நிறைய அல்லது குறைவு | |

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் | |
|---|---|---|
| | 4+ | 5+ |
| MA 1.3 ஒரு தன்மையின் அடிப்படையில் வகைப்படுத்துவர் | **மாணவர்கள்:**<br><br>MA 1.3.1 பொருள்களைக் கீழ்க்கண்டவரையறைக்கேற்ப வரிசைப்படுத்தவர்:<br><br>(i) சிறியது முதல் பெரியது வரை<br>(ii) குட்டை முதல் நீளம் வரை<br>(iii) குட்டை முதல் உயரம் வரை<br>(iv) மெலியது முதல் தடித்தது வரை மற்றும் மாற்று வரிசையில் | |
| MA 1.4 தோரணிகளை அடையாளம் கண்டு உருவாக்குவர் | **மாணவர்கள்:**<br><br>MA 1.4.1 சுற்றுப்புறத்தில் உள்ள தோரணிகளை அடையாளம் கண்டு கூறுவர்<br><br>MA 1.4.2 தோரணியைப் பின்பற்றுவர் | **மாணவர்கள்:**<br><br>MA 1.4.3 கொடுக்கப்பட்ட தோரணியைப் பூர்த்தி செய்வர்<br><br>MA 1.4.4 சுய ஆக்கத்தில் தோரணியை உருவாக்குவர் |
| MA 1.5 நிலைத்தன்மையின் கருத்துருவைப் புரிந்து கொள்வர் | | **மாணவர்கள்:**<br><br>MA 1.5.1 நிலைத்தன்மையை விளக்குவர்:<br><br>(i) நீளம்<br>(ii) பொருண்மை<br>(iii) கொள்ளளவு |

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் | |
|---|---|---|
| | 4+ | 5+ |
| **MA 2.0 எண் கருத்துரு** | | |
| MA 2.1 1 முதல் 10 வரையிலான எண்களைப் புரிந்து கொள்வர் | **மாணவர்கள்:**<br><br>MA 2.1.1 1 முதல் 10 வரையிலான எண்களை நிரலாகக் கூறுவர்<br><br>MA 2.1.2 எண்களைக் குறிப்பின்றி அடையாளம் கண்டு கூறுவர்<br><br>MA 2.1.3 எண்ணை அவற்றின் பெயர்களோடு இணைப்பர்<br><br>MA 2.1.4 பொருள்களை எண்ணுவர்<br><br>MA 2.1.5 பொருள்களின் எண்ணிக்கையைப் புள்ளிகள் போன்ற வடிவங்களைக் கொண்டு பிரதிபலிப்பர்<br><br>MA 2.1.6 குவியலில் உள்ள எண்ணிக்கைக்கேற்ப எண்களுடன் இணைப்பர்<br><br>MA 2.1.7 எண்களை அச்சடிப்பர் | **மாணவர்கள்:**<br><br>MA 2.1.8 ஏறுவரிசை, இறங்கு வரிசையில் எண்களை எண்ணுவர்<br><br>MA 2.1.9 கொடுக்கப்பட்ட பொருளின் வழி ஏறுவரிசை மற்றும் இறங்கு வரிசையில் நிரல்படுத்துவர்<br><br>MA 2.1.10 எண்களை முறையாக எழுதுவர் |

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் | |
|---|---|---|
| | 4+ | 5+ |
| MA 2.2 சுழியத்தை அறிவர் | | **மாணவர்கள்:**<br><br>MA 2.2.1 சுழியத்தை உச்சரிப்பர்<br><br>MA 2.2.2 சுழியத்தை எழுதுவர்<br><br>MA 2.2.3 சுழியத்தின் மதிப்பை அறிவர் |
| MA 2.3 11 முதல் 20 வரையிலான எண்களைப் புரிந்து கொள்வர் | | **மாணவர்கள்:**<br><br>MA 2.3.1 11-20 வரையிலான எண்களை எண்ணுவர்<br><br>MA 2.3.2 ஒப்பிடுவர்:<br><br>(i) 11, 12 இவ்விரு எண்களை ஒப்பிடுவர் (12, 11ஐ விட 1 அதிகம்)<br><br>(ii) 12, 13 இவ்விரு எண்களை ஒப்பிடுவர் (13, 12ஐ விட 1 அதிகம்) அதனைத் தொடர்ந்து<br><br>MA 2.3.3 11 முதல் 20 வரையிலான எண்களை எழுதுவர் |

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் | |
|---|---|---|
| | 4+ | 5+ |
| MA 2.4 10 முதல் 100 வரையிலான எண்களைப் புரிந்து கொள்வர் | | **மாணவர்கள்:**<br>MA 2.4.1 எண்களைப் பத்துப் பத்தாக ஏறுவரிசையிலும் இறங்கு வரிசையிலும் எண்ணுவர் |
| **MA 3.0 எண்களின் விதி** | | |
| MA 3.1 18-க்கு உட்பட்ட எண்களின் சேர்த்தல் விதி பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பர் | **மாணவர்கள்:**<br>MA 3.1.1 இரு குவியலின் பொருள்களின் எண்ணிக்கையைச் சேர்த்துக் கூறுவர்<br>MA 3.1.2 சூழலுக்கேற்ப கொடுக்கப்பட்ட பொருள்களைச் சேர்த்துக் கூறுவர் | **மாணவர்கள்:**<br>MA 3.1.3 ஓர் எண்ணுடன் மற்றொரு எண்ணைச் சேர்த்துக் கூறுவர்<br>MA 3.1.4 சேர்த்தல் (+) மற்றும் சமம் (=) போன்ற குறியீடுகளைக் கொண்டு கணித வாக்கியங்களை எழுதுவர்; கூறுவர்<br>MA 3.1.5 அடிப்படை விதிக்கு உட்பட்டுச் சேர்ப்பர்<br>MA 3.1.6 அன்றாடப் பிரச்சனைக் கணக்குகளுக்குத் தீர்வு காண்பர் |

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் | |
|---|---|---|
| | 4+ | 5+ |
| MA 3.2 18-க்கு உட்பட்ட எண்களின் கழித்தல் விதி பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பர் | **மாணவர்கள்:**<br><br>MA 3.2.1 குவியலில் உள்ள பொருள்களை வெளியேற்றி மீதத்தை எண்ணுவர்<br><br>MA 3.2.2 சூழலுக்கேற்பக் கொடுக்கப்பட்ட பொருளின் மீதத்தைக் கூறுவர் | **மாணவர்கள்:**<br><br>MA 3.2.3 கழித்தல் (-) மற்றும் சமம் (=) போன்ற குறியீடுகளைக் கொண்டு கணித வாக்கியங்களை எழுதுவர்; கூறுவர்<br><br>MA 3.2.4 அடிப்படை விதிக்கு உட்பட்டுக் கழிப்பர்<br><br>MA 3.2.5 கழித்தல் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பர் |
| **MA 4.0 நாணய மதிப்பு** | | |
| MA 4.1 வெவ்வேறு மதிப்புடைய நாணயங்களை அடையாளம் கண்டு பயன்படுத்துவர் | **மாணவர்கள்:**<br><br>MA 4.1.1 மலேசிய நாணயமான காகிதப் பணம், சில்லறைக் காசுகளை அடையாளம் காண்பர் | **மாணவர்கள்:**<br><br>MA 4.1.2 நாணயத்தின் மதிப்பிற்கேற்ப வரிசைப்படுத்துவர்<br><br>MA 4.1.3 பல்வேறு நடவடிக்கையில் நாணயத்தைப் பயன்படுத்துவர் |

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் | |
|---|---|---|
| | 4+ | 5+ |
| **MA 5.0 கால நேர கருத்துரு** | | |
| MA 5.1 அன்றாட வாழ்க்கைச் சூழலில் கால நேரக் கருத்துருவைப் புரிந்து கொள்வர் | **மாணவர்கள்:**<br><br>MA 5.1.1 ஒரு நாளின் காலங்களைக் கூறுவர்<br><br>MA 5.1.2 நேரத்திற்கேற்ப நிகழ்வை வரிசைப்படுத்துவர்<br><br>MA 5.1.3 வாரத்தின் நாள்களை வரிசையாகக் கூறுவர் | **மாணவர்கள்:**<br><br>MA 5.1.4 பற்சக்கர கடிகாரத்தைப் பயன்படுத்திக் கால நேரம் கூறுவர்<br><br>MA 5.1.5 வருடத்தில் உள்ள மாதங்களைக் கூறுவர்<br><br>MA 5.1.6 நடந்த, நடைபெறுகின்ற, நடைபெறவிருக்கின்ற நிகழ்வுகளைக் காலத்துடன் தொடர்பு படுத்துவர் |
| **MA 6.0 வடிவமும் இடபரப்பும்** | | |
| MA 6.1 இடப்பரப்பில் வைக்கப்பட்டுள்ள பொருள் நிலையை அறிவர் | **மாணவர்கள்:**<br><br>MA 6.1.1 பொருள்வைக்கப்பட்ட இடப்பரப்பைக் கூறுவர்<br><br>MA 6.1.2 பொருள்களைக் குறிப்பிட்ட நிலையில் வைப்பர் | |

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் | |
|---|---|---|
| | 4+ | 5+ |
| MA 6.2 சுற்றுப்புறத்தில் காணும் கட்டுமான வடிவங்களைக் கொண்டு மாதிரி கட்டுமானங்களை உருவாக்குவர் | **மாணவர்கள்:**<br><br>MA 6.2.1 சதுரம், செவ்வகம், முக்கோணம், வட்டம் ஆகிய வடிவங்களை அடையாளம் காண்பர்<br><br>MA 6.2.2 இரு பரிமாண வடிவங்களைப் பயன்படுத்திக் கோலங்களை உருவாக்குவர் | **மாணவர்கள்:**<br><br>MA 6.2.3 கனச்செவ்வகம், கனச்சதுரம், கூம்பகம் மற்றும் உருண்டை வடிவங்களை அடையாளம் காண்பர்<br><br>MA 6.2.4 முப்பரிமாண வடிவத்தைக் கொண்டு புது வடிவத்தை உருவாக்குவர் |
| MA 6.3 ஆக்கப்பூர்வமாக பல்வேறு வடிவங்களை உருவாக்குவர் | **மாணவர்கள்:**<br><br>MA 6.3.1 ஒரு முழுமையான வடிவ அமைப்பை உருவாக்கி விளக்குவர்<br><br>MA 6.3.2 இரு பொருள் அல்லது மாதிரி உருவாக்கத்திற்கு இணைப்பை உருவாக்குவர்; கூறுவர்<br><br>MA 6.3.3 ஆக்கப்பூர்வமான மாதிரியைப் பல்வேறு பொருள்களைக் கொண்டு உருவாக்கிக் கூறுவர் | **மாணவர்கள்:**<br><br>MA 6.3.4 நிலையான உறுதியான உருவாக்கத்தைப் பல்வேறு பொருள்களைக் கொண்டு ஆக்கப்பூர்வமாக உருவாக்குவர் |

# சொற்களஞ்சியம்

| எண் | சொல் | விளக்கம் |
|---|---|---|
| 1. | இரு பரிமாண வடிவம் | நீளம் மற்றும் அகலம் கொண்ட வடிவம் |
| 2. | முப்பரிமாண வடிவம் | நீளம், அகலம், உயரம் கொண்ட வடிவம் |
| 3. | அடிப்படை சேர்த்தல் | ஓர் இலக்க எண்களைச் சேர்த்தல்; எதிர்முறையிலும் |
| 4. | அடிப்படை கழித்தல் | ஓரிலக்க அல்லது ஈரிலக்க எண்களில் ஓரிலக்க எண்களைக் கழித்தால் வரும் விடை ஓரிலக்க எண்ணில் இருக்க வேண்டும். |
| 5. | வடிவ அமைப்பு | ஏதாவது ஒன்றின் எல்லை (கோடு மற்றும் சில) |

# மனிதவியல்

# உத்திரம்

# மனிதவியல் உத்திரம்

மனிதவியல் உத்திரம் தான், சுற்றத்தார் வட்டார சமூகம், சுற்றுச்சூழல், மலேசிய நாடு, உலகம் ஆகியவற்றை அறிந்து பாராட்ட வாய்ப்பளிக்கிறது. சமுதாயம் வளமடைய மாணவர்கள் தங்களின் பங்களிப்பு, கடமை, சேவை, மற்றும் வட்டார மக்களைப் புரிந்து கொள்ள வேண்டும். இவ்வுத்திரம் மூலம் பெறும் அறிவும் திறனும் மாணவர்களை அக்கறையும் பொறுப்பும் மிக்க தனிமனிதனாகவும் நற்குடிமகனாகவும் தயார் செய்கிறது.

